328

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநசம்பந்தகுருப்யோநம:

சித்தாந்தரத்நாகரம்.

கக-வது சஞ்சிகை.

இதிலடங்கிய நூல்கள்.

ஆசார்யப்பிரபாவம்.

ஆபாசஞானதிரோதம்.

சிவபாரம்யப்பிரதரிசிநி.

இவை

"வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயக ரவர்களால்

இயற்றப்பட்டு

ஷியார் மாணவகர்

ப-அப்பாவு செட்டியா ரவர்களால்

பரிசோதித்துத் தமது

சென்னை

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதிந்து

வெளியிடப்பட்டன.

Second Edition.

30 November 1906.

Copy-right Registered.

கௌரவாபிமான கண்ணிய [illegible]

குருஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகள்

ஸ்ரீ-மஹா சந்நிதானம் அவர்கள், சகாயதன வரவு ரூ 50.

மதுரை.

ஸ்ரீமாந்-பொ-பாண்டித்துரைத்தேவர் அவர்கள்.

Zemindar, வரவு ரூ 25.

மதுரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி, Madura.

,, N. கொண்டல்ராயசாமி நாயுடு அவர்கள்.

Zemindar, Kurivikulam.

,, பூமியப்ப முதலியார் அவர்கள்.

Zemindar, Markanam.

,, அப்பாதுரை முதலியார் அவர்கள்

Zemindar, Markanam.

,, ராயபுரம் ஞா. மெய்கண்டதேவ முதலியார் அவர்கள்.

Mysore Hall Contonment, Bangalore.

,, J. M. நல்லசாமிப்பிள்ளை அவர்கள், B. A. B. L.

District Munsiff, Salem.

,, பு-சி. தெய்வசிகாமணி செட்டியார் அவர்கள்.

Merchant, Devi Villa, Tondiarpett, Madras.

,, C. R. முருகேச முதலியார் அவர்கள்.

Dubash, Gordon Woodroffe & Co, Madras.

,, சொக்கலிங்க நாயகர் அவர்கள்

Contractor, Madras.

,, செங்கற்பட்டு-அரங்கசாமி நாயகரவர்கள்

Merchant, Madras.

மதுரை நான்காந் தமிழ்ச்சங்கவித்வான்.

சென்னை,

வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார்

கொண்டருளியதலம். இவைகளேயன்றி, "கண்ணைக்கெடுத்ததெய்வம் கோலைக்கொடுத்தது" எனவும், "ஆற்றிலேபோட்டுக் குளத்திலே தடவுதல்" எனவும்போந்த பழமொழிகளில், கண்ணைக்கெடுத்தது திருவொற்றியூரிலும், கோலைக்கொடுத்தது திருவெண்பாக்கத்திலுமென்று ஸ்ரீசுந்தரமூர்த்திகள் விஷயமாக அறியவேண்டியது. இவரிடத்திலேதானே பிந்திய பழமொழியும் ஸமர்த்தனமாம். ஆற்றிலேபோட்டது மணிமுத்தாநதியிற் சிவனார்கொடுத்த பொன்னைப்போட்டதும், குளத்திலே தடவியது திருவாரூர்த்திருக்குளத்தி லதனை யெடுத்ததுமாமென்றறிக. இவ்வாறு பலவுளவற்றை மெய்யன்ப ராங்காங்கறிந் தின்புறுவாராக. பிள்ளையார் ஆற்றிலிட்ட திருவேட்டில் "வேந்தனுமோங்குக" என்றமைந்தநலத்தாற் கூனுயிருந்தபாண்டியன் அது நிமிர்ந்தோங்கப் பெற்றானாகலின், அத்தகைய வருணலஞ்செறிந்த திருப்பதிகம் அருளெழுதியிருந்த வேட்டினை போங்கச்செய்ததென லதிசயமன்று. அத்திருப்பதிகத்திற் போந்த "வேந்தனுமோங்குக" என்னும்பகுதி பாண்டியனது கூனை நிமிர்த்தினமையால், அத்திருப்பதிகத்திற்போந்த வேனைப்பகுதிகளு மவர்திருவாக்கிற்போந்த நலமெய்துதலினாலே நிலைபெற்றனவெனல் சரதமாயிற்று. அவர் திருவாக்கில் அவை விஷயமாகாதபோது அவை நிலைபெறாவென்பதே திண்ணம். ஆகலினாற்றானன்றோ யாமிந்நூலின் முதற்கண்ணெடுத்துக்கொண்ட "சொற்கோவும்" என்னும் திருவெண்பாவில் "முற்கோலி-வந்திலரேனீறெங்கே மாமறைநூலெங்கே-யெந்தைபிரா னைந்தெழுத்தெங்கே" எனப் பூர்வீகர்க ளறுதியிட்டுரைத்திருக்கின்றனர்? பிள்ளையாரில் வேறாகாத வேனையாசாரியர்களு மீண்டுப் படிக்கப்பட்டிருத்தல் பாதகமாகாதென்க. இனிச் சமணரைக்கழுவேற்றிய பகுதியை மேல் விசாரித்து முடிவுசெய்வோமாகையா லாண்டுக் கண்டுதெளிக. அந்தரம் பிள்ளையார் சொக்கலிங்கப்பெருமானை வணங்கி "வீடலாலவாயிலாய்" என்னுந் திருப்பதிகத்தில், "பாலனாயதொண்டுசெய்து பண்டுமின்று முன்னையே' எனத் தமதுசுதந்தரத்தையே விளக்கினர். ஞானஸம்பந்தராயுள்ளபோதும், தத்பூர்வமுந் தாஞ்சிவனார்க்குப் பாலரென்பதையே யாண்டுதீவித்தாராயிற்று. பிதா பிள்ளைக்குத் தேடும் பெருமையத்தனையும் அப்பிள்ளைக்கே யுரிமையாவது நைஜதர்மமாகையால், சிவனாது தொண்டாகச் சைவஸ்தாபனஞ்செய்து பிள்ளையார் உலகமுய்யவழிதேடியது தமது பெருமையையே நிலைபெறுவித்ததாயிற்று. பிள்ளையார் விளக்கிடாகப்பிறந்த வோருபிரா காசையும்; அதனால் வினைப்போகத்தை தகர்ந்தொழிக்குஞ் சுயப்

பிரயோசனமெய்தாது, அவ்வினைப்போகத்தை யுயிர்களுக்கு நுகர்வித்தொழித்தலாகிய பரப்பிரயோசனத்தைச்செய்யும் பதியாயினமையும் போதரவே ஸ்ரீசேக்கிழார்சுவாமிகளது திருவாக்குகள் பலவிளங்குகின்றன. அவை "சராசரங்களெல்லாஞ் சிவம்பெருக்கும் பிள்ளையார்" எனவும், "பரசமயநிராகரித்து நீறாக்கும்- புனைமணிப்பூண்காதலன்" எனவும், "பேறுலகினுக்கெனவரும்பெரியவர்" எனவும் "அருமறைகடலையெடுப்ப வாண்டதிருமுடியெடுத்து" எனவும், "எழிலிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே - வாழவருமவர்' எனவும் போந்தனவேயாம். இவ்வாறன்றி (வினையொழியப்பிறந்துசிவம் வேண்டிமிகத்தவஞ்செய்து) எனவும் (எண்ணிறைர்சிவன்பாத மிருவினைக்கட்டறநின்றார்) எனவும் வருவனபோல்வதொரு பிரயோகமும் பிள்ளையார் விஷயமாக ஸ்ரீசேக்கிழார் திருவாக்கிற் பெறப்படாமையால், அப்பெரியோனது அருமைத்திருவாக்குகளிற்போந்த கௌரவப்பிரயோகங்களைக் கிலுஷ்டகல்பனை வழியிற்றிருப்பித் தாழ்ந்த பொருள்களைக் கற்பித்து வீணுக்கு முத்தலைபோட்டு வருந்தும் பேயர்களது போதத்தை ஸாதுக்கள் காற்கடைகொண்டெற்றித் தூச்சமென்றெறுக்கிக் குணப்படுவாராக. இன்னும் விரிக்கிற் பெருகும்.

பிள்ளையாரது பிரபாவம்.

(க௬௫ - வது பக்கத்தொடர்ச்சி)

பிள்ளையார் சமணர்களைவென்று மதுரையிலெழுந்தருளியிருக்கையில் சிகாழியினின்று சிவபாதஹ்ருதயர் மதுரைக்குவந்து பிள்ளையாரைக்கண்டு தொழுதார். பிள்ளையாரு மவரை யெதிர்தொழுது உபசரித்தனர். அங்கேநின்றும் பாண்டியர்பெருமான் - மங்கையர்க்கரசியார் - குலச்சிறையா| ரிவர்களிடத்தி லரிதில் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருப்பரங்குன்றம் - திருவாப்பனூர் - திருப்பூவணம் - திருக்குற்றாலமுதலிய தலங்களுக்கெழுந்தருளிப் பதிகங்களோதிமகிழ்ந்து இராமேச்சுரஞ்சென்று அங்குச் சிலபோது தங்கி, அங்கிருந்தபடியே ஈழமண்டலத்திலுள்ள திருக்கோணமலை-திருக்கேதீச்சரம் என்பவைகளைப் பாடித்துதித்தார். சிலநாள்கழிந்தபின்னர் அங்கேநின்றுந் திரும்பித் திருவாடானை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு குலச்சிறையாரது பதியாகிய மணமேற்குடியை

வந்தடைந்தருளினர். அங்கிருந்துகொண்டே பலபதிகளுக்குச் சென்று பதிகம்பாடித்துதித்தார். பின்பு சோழநாட்டுக் கெழுந்தருளினர். அப்போது பாண்டியர்பெருமானும், ஏனையோரும் வருந்தித் தாமுங்கூட வருவதாகக் கேட்டார்கள். சுவாமி அவர்களுக்குத் திருப்தியுரைத்துத்தேற்றி விடைபெற்றுக்கொண்டு அவர்களை நிற்கச்செய்து திரும்பிவிட்டார். பாண்டிநாட்டைக் கடந்தவராகிய பிள்ளையார் திருக்களர் - திருப்பாதாளீச்சரமுதலிய தலங்களை வணங்கிக்கொண்டு முள்ளிவாய்க்கரையை யணைந்தருளினர். அங்கே ஆறு பிரவாகங்கொண்டு ஓடங்களிலேகொள்ளாமையால், அவைகளைக் கரையிலே நிறுத்திவிட்டு ஓடக்காரர்கள் போய்விட்டார்கள். பிள்ளையார் அடியார்களோடு கரையிலேநின்று எப்படி ஆறுகடப்பதென்று யோசித்தனர். அப்போது ஆற்றுக்கு அந்தக்கரையிலுள்ள திருக்கொள்ளம்பூதூர் என்னுந்தலந்தோன்றியது. உடனே அந்தத் தலத்துக்கெழுந்தருளி அங்கு ஸ்வாமிதரிசனஞ் செய்யவேண்டுமென்னுமாசை யுள்ளத்திற் பொங்கியெழுந்தது. அதனால், கரையிலே கட்டப்பட்டிருந்த வோடங்களை யவிழ்த்து ஆற்றிலேதள்ளி அவைகளில் அடியவர்களை யேறும்படிச்செய்து தாமுங்கூடவேறி "கொட்டமேகமழும்" என்னுந் திருப்பதிகம் அருளிச்செய்தனர். திருவோடம் ஒருதடையுமின்றி அக்கரையை யடைந்தமையால், அடியார்கள் கீழேயிறங்கி மகிழ்ந்தார்கள். உடனே பிள்ளையார் திருக்கோயிலினுட்சென்று வணங்கித்துதித்துச் சிலநாளங்கெழுந்தருளியிருந்தனர். பின்பு திருநள்ளாறு என்னும் பதியை அடைந்தனர். சமணர்களை நெருப்பிலேநின்றுவென்ற பதிகத்தையுடைய தலமாகிய வந்தத்தலத்தை யடைந்தபோது "பாடகமெல்லடி" எனனும் வினவுரைத் திருப்பதிகம்பாடி மகிழ்ந்து சிலபோதுவைகினர். பின்பு திருத்தெளிச்சேரியை அடைந்து சிவதரிசனஞ்செய்துகொண்டு செல்லும்போது பௌத்தர்களூராகிய போதிமங்கைசமீபித்தது. அதனையறிந்த மெய்யடியார்கள்யாவரும் சங்கு-தாரைமுதலிய சின்னவொலிகளையும், பலவாச்சியமுழக்கங்களையும், பிருதுகள் கூறுமார்வாரங்களையும் எழுப்பி அங்குள்ளபுத்தர்களைக் கலக்கினர்கள். அதனால், புத்தர்கள் வெகுண்டு தங்கள் சமயத்தலைவனாகிய புத்தநந்தியோடுவந்து அடியவர் திருக்கூட்டத்தவர்களோடு பிள்ளையார் தங்களுடைய மடத்து வீதியிலேபோவதுகூடாதென்று தடுத்தார்கள். அதுகண்டு பொறாகிய சம்பந்தசரணாலயர் எமது ஆண்டவனையுந் தடுப்பவருள

ரோ வெனக்கனன்று “புத்தர்சமண்கழுக்கையர்” என்னும் பிள்ளையாரது திருப்பதிகத்தையெடுத்தோதி, எங்கள் பெருமானைத்தடுத்த புத்தநந்தியின் றலையிடறிவிழும்படி இடியிடித்துவிழக்கடவது என்று சொல்லியருளினார். உடனே அவ்வாறு முடிந்தது. அதுகண்ட அடியார்கள் முன்னிலும் பதின்மடங்கதிகமாக ஆரவாரித்தார்கள். பிள்ளையார் அடியார்களைப்பார்த்து (ஹரஹர) என்று கோஷிக்கும்படிக் கட்டளையிட்டனர். அவ்வொலி மிக்கோங்கியது. புத்தர்கள் நிலைகலங்கியோடினார்கள். அங்ஙனமோடினவர்கள் மானமேற்கொண்டு பொறாமல் மீண்டுங்குழுமிச் சாரிபுத்தன் என்னுந் தலைவனைத்துணைகொண்டு பிள்ளையாரையடைந்து எங்களோடு மந்திரவாதமின்றித் தருக்கம்பேசவாரும் என்று கேட்டார்கள். அதற்குப் பிள்ளையாரிசைந்து ஒரு சத்திரமண்டபமேறிச் சித்தமாயினர். அங்கே சாரிபுத்தனும் வந்துநின்றான். அப்போது திராவிடவேதலைககராகிய சம்பந்தசரணாலயர் சுவாமியை வணங்கித்துதித்துச் சாரிபுத்தனோடு வாதுசெய்து அவனுடைய சமயத்தை நிராகரணஞ்செய்துவென்று பிள்ளையாருடைய திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தார். அப்போது புத்தர்களுக்குச் சைவசமயத்தினுண்மை யினிது விளங்கினமையால், அவர்கள்யாவருஞ் சைவராகிப் பிள்ளையாரது திருவடிக்காளாகி யுய்ந்தார்கள்.

பின்னர் அவ்விடத்தினின்றும் பிள்ளையார்நீங்கித் திருக்கடவூரிற்சென்று சிவதரிசனஞ்செய்துகொண்டு சிலநாளங்கிருந்து திருப்பூந்துருத்தியில் அப்பர்சுவாமிகளிருப்பதாகவறிந்து அவரைக்காணும் விருப்பத்தோடு அங்குச்செல்லுகையில், அப்பர்சுவாமிகள் இஃதறிந்து தம்மையொருவருமறியாதபடி யெதிர்வந்து அடியார்கள் திருக்கூட்டத்தினுழைந்து பிள்ளையாரது சிவிகைதாங்கிவருமடியார்களிற் றாமுமொருவராகச்சுமந்துகொண்டு தமக்குக்கிடைத்தபெரும்பாக்கியத்தைச் சிந்தித்திறுமாந்து வந்துகொண்டிருந்தார். பிள்ளையார் திருப்பூந்துருத்திக்குச் சமீபித்தவுடனே “எமது அப்பர்எங்குற்றார்” என்று வினவினர். அதனைக்கீழிருந்துகேட்ட அப்பர்சுவாமிகள் “அடியேன் தேவரீரைத்தாங்கும் பெருவாழ்வுற்று இருக்கிறேன்” என்று உடனே விடைபகர்ந்தனர். அதனைக்கேட்டபிள்ளையார் மனம்பதைத்துச் சிவிகையினின்றுமிறங்கி அப்பர்சுவாமிகளைவணங்கினார். அவர்வணங்குவதன் முன்னர் அப்பர்சுவாமிகள் அவரைவணங்கினார். அதுகண்ட அடியார்கள்யாவரும் அமலமூர்த்திகளிருவரையு

ம்வணங்கி ஆநந்தகோஷஞ்செய்தார்கள். பிள்ளையார் தாம் பாண்டி
நாட்டிற் சென்று நடத்தியகாரியங்களையும், அந்நாடுமுழுவதும்
சிவமணம் பரவியதையும், அங்குள்ள குலச்சிறையார் - மங்கையர்
க்கரசியார் என்னும் இருவருடைய பெருமையையும் அப்பர்சுவாமிக
ளுக்குச் சொல்லியருளினர். அப்பர்சுவாமிகள் தாம் தரிசித்துவந்த
தொண்டைநாட்டிலுள்ள சிவஸ்தலங்களின் மகிமையைப் பிள்ளை
யாருக்குச் சொல்லியருளினர். இவர்தம்முள், அப்பர்சுவாமிகள் பா
ண்டிநாட்டில் குலச்சிறையார் - மங்கையர்க்கரசியா ரென்பவர்களை
க் காணும்விருப்பமேற்கொண்டு அங்கெழுந்தருளினர். பிள்ளையார்
மார்க்கத்திலுள்ள பதிகளையெல்லாந் தரிசித்துக்கொண்டு சீகாழிக்
க்குச் சென்று, அங்கேநின்றுந் தொண்டைமண்டலயாத்திரையை
விரும்பித் தோணியப்பரைத் தரிசித்துக்கொண்டு சிதம்பரத்தைய
டைந்து ஸ்வாமிதரிசனஞ்செய்து திருத்தினைநகர் - திருமாணிகுழி-
திருப்பாதிரிப்புலியூர் - திருவடுகூர் - திருவக்கரை - திருவாமாத்தூர்
திருவண்ணாமலை என்னுந் தலங்களுக்குச்சென்று பணிந்து திரு
வோத்தூரை யடைந்தார். அங்கு ஒரு சிவனடியார்வந்து பிள்ளை
யாரைவணங்கி, எம்பெருமானே! அடியேன் சிவபெருமானுக்கெ
ன்றுவிட்ட பனைகள் மிகவுயர்ந்து செழுமையாகவளர்ந்தும் அவை
யாவும் ஆண்பனைகளாகிப் பலந்தராவாயின. அதனால், இங்குள்ள ச
மணர்கள் எம்மைநோக்கி உங்கள்சமயவுண்மையால் இவ்வாண்பனை
கள் பெண்பனைகளாகிப் பலந்தருதல் கூடுமோவென்று இகழ்ந்துபே
சுகின்றார்கள். அதை நிவிர்த்திசெய்து அடியேனைக்காத்தருளல்வே
ண்டும் என்று விண்ணப்பஞ்செய்தனர். அதற்குப்பிள்ளையார் திரு
வுள்ளமிசைந்து எழுந்து விரைந்து திருக்கோயிலிற்சென்று வணங்
கிப் "பூத்தொத்தாயின" என்னுந் திருப்பதிகம்பாடியருளினர். அந்த
த்திருப்பதிகத்தில் குரும்பையாண்பனையீன்குலையோத்தூர்" என அமி
ர்ததாரை யுண்டாயினமையால், அங்குள்ள ஆண்பனைகளெல்லாம்
பெண்பனைகளாகிப் பலந்தந்துநிற்பனவாயின. இவ்வதிசயத்தைக்க
ண்ட சமணர்கள் பலர் ஓடியொளித்தார்கள். சிலர் திருவருளின்
பெருமை யறிந்து பிள்ளையாரது திருவடிக்காளாகி, இதற்குக்கார
ணமாயிருந்த அச்சிவனடியாரது திருவடிகளைவணங்கிச் சைவரானா
ர். அந்தப்பனைகள் பிள்ளையார்து திருவாக்குக்கு விஷயமாயினமை
யால், அவையாவும் பின்னர் சிவத்தையடைந்து பிறவியை யொ
ழித்துக்கொண்டன.

பிள்ளையார், சிலநாளாயினபின் அந்தத்தலத்தைநீங்கித் திருமாகறல், திருக்குரங்கணின்முட்டம் என்னுந்தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீகாஞ்சியையடைந்தார். அங்கே திருவேகம்பம் - திருக்கச்சிநெறிக்காரைக்காடு - திருவனேகதங்காவதம் - திருக்கச்சிமேற்றளி யென்பவைகளைத் தரிசித்துக்கொண்டு, திருமாற்பேறு - திருவல்லம் - திருவிலம்பயங்கோட்டூர் - திருவூறல் முதலாகிய பதிகளுக்குச்சென்று பதிகங்களோதிவணங்கிப் பழையனூர் திருவாலங்காட்டை நோக்கிநடந்தார். அது காரைக்காலம்மையார் தலையாலேநடந்த திருப்பதியாதலால் அதனைமிதிப்பது கூடாதென்று அதற்கு ஸமீபத்திலுள்ள வோரூரிலே அன்றிரவு தங்கியருளி, அங்கிருந்தபடியே சிவனுரைது வேண்டுகோளால் "துஞ்சவருவாரும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அங்கேநின்றுந் திருப்பாசூர்-திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருக்காளத்தியையடைந்து ஸ்ரீ கண்ணப்பதேவருடைய திருத்தொண்டினைச் சிறப்பித்து "வானவர்கடானவர்கள்" என்னுந் திருப்பதிகம்பாடித் திருமலைமேற்சென்று ஸ்வாமியைவணங்கினார். பின்புமலையினின்றுமிறங்கி யொரு திருமடத்திலெழுந்தருளியிருந்து காலந்தோறுந் தப்பாமல் ஸ்வாமிதரிசனஞ்செய்துகொண்டு சிலபோது அங்குவசித்தார். அந்தக்காலத்தில் அங்கிருந்தபடியே உத்தரகைலாசம் - திருக்கேதாரம் - திருக்கோகர்ணம் - திருப்பருப்பதம் - இந்திரநீலபருப்பதமுதலிய தலங்களைவணங்கித் திருப்பதிகங்கள் பாடியருளினார். சிலநாள்கழிந்தபின் ஸ்ரீகாளத்தியைவணங்கித் திருவேற்காடு-திருவலிதாயமுதலிய தலங்களைவணங்கிக்கொண்டு திருவொற்றியூரையடைந்து ஸ்ரீ சிவபெருமானை வணங்கித் துதித்து அங்கெழுந்தருளியிருந்தார். அப்போது திருமயிலாப்பூரில் வைசியகுலதிலகராயெழுந்தருளியிருந்த சிவநேசர் என்பவர் பிள்ளையாரைத் திருவொற்றியூரிற்சென்று தரிசிக்குமாறு திருமயிலையிலிருந்து திருவொற்றியூர்வரைக்கும் நடைப்பந்தலிட்டு, வஸ்திரங்களால் விதானமிழைத்துக் கமுகுகளும் வாழைகளும்நாட்டி, தோரணங்கணிறைத்து, கொடிகள்கட்டி, மாலைகள்தூக்கி அலங்காரஞ்செய்வித்து அடியார்கள் உடன்செல்ல ஸ்வாமிஸந்நிதியை நோக்கிவந்தார். அப்போது ஸ்வாமியும் திருவொற்றியூரைநீங்கித் திருமயிலையைநோக்கி யெழுந்தருளினார். சிவநேசரும், சிவனடியார்களும் எண்ணிறந்த அடியார்கள் சூழப் பிள்ளையாரெழுந்தருளிவரு மற்புதக்காட்சியைத் தூரத்தி

லேகண்டு அளவில்லாத மகிழ்ச்சிகொண்டு பூமியிலேவிழ்ந்து நமஸ்கரித்தார்கள். பிள்ளையார் சிவிகையினின்று மிறங்கி அவர்களை யெதிர்தொழுதனர். அப்போது அவ்வடியார்கள் ஸ்வாமியைநோக்கி எமதுபெருந்தகையே! அன்பராகிய சிவநேசருக்கு அரியதவத்தாலொரு பெண்மகவுண்டாகி ஸ்ரீமஹாலட்சுமியாரைப்போல அழகு சிறந்துவிளங்கியது. அதற்குப் பூம்பாவையென்றுபேரிட்டு, அதனைத் தேவரீருக்குக்கொடுத்துக் கலியாணஞ்செய்வித்தலே தகுதியெனத் துணிந்து ஓர்நாள் தமதுசுற்றத்தார் முதலிய பலருங்கேட்க "அடியேன் என்னுடைய புத்திரியாகிய பூம்பாவையையும், என்னுடைய பொருள்களையும், என்னையும் திருஞானசம்பந்தமூர்த்திகளுக்குக் கொடுத்துவிட்டேன்" என்றுசொல்லிப் பேரானந்தமடைந்தார். இவ்வாறு மகிழ்ந்திருக்கையில், அந்தப்பெண்ணமுதம் ஓர்நாள் சேடியரோடு மல்லிகைப்பந்தரில் பூக்கொய்தது. அப்போது அங்கொருஸர்ப்பமிருந்து கையிற்றீண்டியது. அதனாற் சிவநேசர்வருந்திப் பலவிதஸாதகங்களைத்தேடி முயன்றும் ஓராற்றானும் அவ்விஷந்திரும்பாமல் அக்குழந்தை இறந்தது. அதுகண்ட அன்பர் "இந்தப்பெண்ணைப் பிள்ளையாருக்கென்று நான் அர்ப்பணம்பண்ணினமையால் நான் இப்போது துன்புறவேண்டியதில்லை. இவ்வுடலைத்தகனஞ்செய்து பிள்ளையார்வருமளவும் எலும்பையும், சாம்பலையுஞ் சேமித்துவைப்பேன்" என்று துணிந்து அப்படியே தகனஞ்செய்து, எலும்பையுஞ் சாம்பலையுமோர்குடத்திலிட்டு, கன்னிமாடத்திலே ஸர்வோபசாரங்களுடன் வைத்திருக்கின்றார். இவருடையவிருத்தாந்தம் இது என்று விண்ணப்பஞ்செய்து பணிந்தார்கள். இவ்வருமையைக் கேட்டருளிய பிள்ளையார் மகிழ்ந்து சிவநேசரைநோக்கி உமது திருமகளாரது என்புநிறைத்தகுடத்தைத் திருமதிலின்புறத்தே கொண்டுவாரும் என்று கட்டளையிட்டனர். அவரவ்வாறே கொண்டுவந்து ஸ்ரீகபாலீசரது அபிமுகத்திலே வைத்தனர். அதனைப் பிள்ளையார்கண்டு பரமசிவனது திருவருளின் பெருமையைச் சிந்தித்துத் திருவருணோக்கினாலே (பூம்பாவாய்) என்று அழைத்து "பூமியிலே மானிடஜன்மமெடுத்தவர்கள் பெறும்பயன் சிவனடியார்களுக்குத் திருவமுதூட்டுதலும், அவர்க்குச்செய்யுந் திருவிழாச்சிறப்புகளைக் கண்களினாற்கண்டு இன்புறுதலுமேயென்பது ஸத்தியமாயின், நீ இவ்வுலகர்முன்வருவாய்" என்று "மட்டிட்டபுன்னை" என்னுந் திருப்பதிகத்தை எடுத்தருளினார். அதில் அருளிச்செய்த (போதியோ) என்னுந் திருவாக்காகிய அமிர்தம் அவ்வங்கத்திலேபொருந்த, அது குடத்தினுள்ளே சரீரமாய்ப்பரிணமித்தது. பூம்பாவை முதற்பாடலி

ல்வடிவுபெற்று, இரண்டுமுதல் எட்டாவது பாடல்வரையில் பன்னிரண்டுவயசடைந்து அக்குடத்திற்றானே அடங்கியிருந்தனள். அப்போது பிள்ளையார் பூம்பாவையைக்குறித்து நீ குடத்தினுள்ளடங்கி வெளிப்படாதிருப்பது தக்கதன்று, சமணர்களும் புத்தர்களும் பரிகசிப்பார்கள் என்னுங்கருத்தினாற் பத்தாந்திருப்பாட்டை அருளிச்செய்தார். அதுபொழுது பூம்பாவை தன்கைவெளிப்படத்தோன்றக் குடமுடைந்து எழுந்தாள். அதுகண்டு பிள்ளையார் திருக்கடைக்காப்புச் சாத்தியருளினார். பூம்பாவையைக் கண்டவர்களெல்லாம் அன்பும் அதிசயமுமதிகரித்துப் பலவாறுதுதித்து வியந்தார்கள். தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள். சிவனடியார்கள் (ஹரஹர) என்றொலித்தார்கள். சமணர்களும், புத்தர்களுங்கலங்கித் தள்ளாடிவீழ்ந்தார்கள். பூம்பாவையைக்கண்ட தந்தையாராகிய சிவநேசர் உள்ளம்பூரித்து, பிள்ளையாரது திருவடிகளின்மேல்விழுந்து நமஸ்கரித்தார். பூம்பாவையார் சிவபெருமானையும், பிள்ளையாரையும் நமஸ்கரித்துக்கொண்டார். அப்போது பிள்ளையார் சிவநேசரைநோக்கி இனி உமதுபுத்திரியை வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோமென்று கட்டளையிட்டனர். அதற்கு அவர் பிள்ளையாரது திருவடிகளில் வணங்கியெழுந்துநின்று, எந்தையே! அடியேனது அரியபுத்திரியாகிய இப்பெண்கொடியைத் தேவரீர் திருமணம் புரிதல்வேண்டும் என்று பிரார்த்திக்க, பிள்ளையார் அவரைநோக்கி நீர்பெற்றபெண் விடத்தினாலிறந்தாள், இவளை எல்லாவுயிர்களும் பிழைக்கும்பொருட்டுச் சிவபெருமானது திருவருட்பிரகாசம் உலகிலினிநோக்க யாமுயிர்ப்பித்தமையால் நீர்சொன்னவார்த்தை தகாது என்று மறுத்தருளினார். அதுகேட்டசிவநேசர் கலங்கிப் பின்புதெளிந்து பிள்ளையாரிடம் விடைபெற்றகன்று பூம்பாவையை வேறொருவருக்கும் விவாகஞ்செய்துகொடுப்பதில்லையென்று துணிவுற்று அழைத்துக்கொண்டுபோய்ப் பழையபடிக் கன்னிமாடத்தில்வைத்தனர். அப்பூம்பாவையார் அப்படியேயிருந்து சிவத்தைமேவினார். திருக்கோயிலினுள்ளே யெழுந்தருளிய பிள்ளையார் சுவாமியைவணங்கித்துதித்து, திருப்பதிகம்பாடிக்கொண்டு புறம்போந்து எழுந்தருளியிருந்தார். சிலநாளாயினபின், பிள்ளையார் திருமயிலாப்பூரையகன்று திருவான்மியூர், திருவிடைச்சுரமுதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டுசிதம்பரத்தையடைந்து சிலபோது அங்கெழுந்தருளியிருந்தார். அதனையறிந்த சிவபாதவிருதயரும், சீர்காழியிலுள்ள மற்றைப்பிராமணர்களும், சிவ

னடியார்களும் அங்குச்சென்று பிள்ளையாரைவணங்கிச் சீர்காழிக்கு வரும்படி அழைத்தார்கள். பிள்ளையார் அதற்கிசைந்து அவர்களோடு ஸ்ரீசபேசரைவணங்கி அருள்பெற்றுச் சிதம்பரத்தையகன்று, சீர்காழியை யடைந்து காலந்தோறுந் தோணியப்பரை வணங்கிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அப்போது முருகநாயனார்-திருநீலநக்கநாயனார் முதலிய மெய்யன்பர்கள் சுவாமியையடைந்து அவரை ஸேவித்துக்கொண்டு இனிது மகிழ்ந்திருந்தார்கள்.

சூசனை.

பிள்ளையார் மதுரையிலெழுந்தருளியிருந்தபோது அவரைச் சிவபாதவிருதயர் அங்குவந்து தொழுதனரென்கையால், அவரது தெய்வத்தன்மையே அதற்குக்காரணமாயிற்று. பிதா பிள்ளையைவணங்குதல் கூடாதன்றோ? இதற்குமாறாக அவர்வணங்கினமையின், பிள்ளையாரைச் சிவபாதவிருதயருக்குத் திருமகனாரென்பது அவருக்குப் பெருமையுண்டாகவேண்டி யுபசரித்தபடியாம். அவர் பிள்ளையாரை வளர்த்தபிதாவென்பது பிரஸித்தம். இதுவே பிள்ளையாரை அவர் எதிர்தொழுதாரென்றதற்குங் காரணமென்க. சிவபாதவிருதயர் தவமிக்குடையராகலின், அவரெம்பிரானாருக்குத் தந்தையென்றுபசரிக்கப்பெற்றும், அவராலெதிர்தொழப்பெற்றும் புகழெய்தினரென்க. அவர்மதுரையினின்றும் புறப்பட்டுப் பாண்டியர்பெருமான்-மங்கையர்க்கரசியார்-குலச்சிறையாரிவர்களிடம் விடைபெற்றுப்பிரிந்தனரென்னுங்கால், பாண்டியர்பெருமான் முதலினோரெவ்வாறாயினரென்பது யாம் கணிக்குந்தரமன்று. இன்பவடிவினராகிய பிள்ளையாரைப்பிரிந்தபோது அன்னோரவசமுற்றழிந்தநிலைமை பரிதாபமென்க. அம்முழுமுதற்பிரானை நட்டவன்பின்றிறமும், அவர் தாமடைந்தவன்பினாழமு மதிகமாகையால், அவைமாறுதல்யாங்ஙனம்? அது அவரது பெரும்பாக்யமென்க. இனிப்பிள்ளையார் திருக்கொள்ளம்பூதூர்ப்பதிகமோதி ஓடத்தைத் தமது திருவாக்கிலேயின்றாய் பிறந்தவாணையானடத்தினர். ஓடக்காரரின்றி யோடத்தை நடத்தினரென்கையால், அவ்வோடக்காரர் தாமேயாயினர். இந்நிதரிசனம் “துயரக்கடல்கடத்துந் தோணியே தோணி. வியலூர்த்திருநெறிக்கோலென்றும்-அயனன், றடையுமருட்காழியதிபஃதூர்வானாயின், சடையனெற்கென் குறையாங்கான்” என்னுநலத்தைப் பயப்பதொன்றாயிற்று. இதனால்

"பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தா-ரிறைவனடிசேராதார்" என்னுந் திருக்குறளிற்படித்த தெய்வமாவார் பிள்ளையாரெனலே அமைவுடைத்து. இதற்கு "இரும்புண்டநீரி னிரும்பாதவீடுதரு மினியகவுணியர் விளக்கே" என்னுமாதவருரையுஞ்சான்றென்க. இவ்வுண்மையுணர்ந்தபேர் பிள்ளையாரைவழிபட்டுப் பிறவித்துயர்கடத்தலும், அங்ஙனம் வழிபடுங்கால் (தெப்பவிழா) முதலிய திருவிழாப்பொலிவு கண்டார்தலுமாகிய செயற்கரியகாரியங்கள் செய்துய்வரென்க. இதுநிற்க. எமது சிறிய பெருந்தகையார் திருத்தெளிச்சேரியையடைந்து போதிமங்கை என்னும் புத்தநகரையணைந்தபோது அங்குப் பிள்ளையாரது விருதுகளாகிய சங்கு - தாரைமுதலிய சின்னங்களும், பலவாச்சியங்களும், பரசமயகோளரியார்வந்தார் என்பதுமுதலிய கட்டியங்களுமுழங்கின. புறச்சமயத்தவரை யொடுக்கிப்பெறுவார் அப்புறச்சமயிகளைத் தட்டியெழுப்பி வாதுக்கழைத்தல் மரபென்பதனையே சுதறிவித்தது. அன்றியும், எமதுபிள்ளையார் பூர்வம் சமணமதத்தைத் தொலைத்தாராகையால், புத்தமுந்தொலைக்கத் திருவுள்ளமிசைந்தாரெனல் அமைந்தது. புத்தர்கள்வெகுண்டு பிள்ளையார் தமதுமடத்தின்வழி விருதுகளோடு போதல்பொறாராய்த் தடுத்தனரென்பது சூரியனை மேகங்கள் மறைத்ததையேமானும். சூரியனுக்கு மேகத்தாலிடையூறின்றி அச்சூரியனொளியை அநுபவிக்குமுலகினர்க் கிடையூறுண்டாயினவாறு பிள்ளையாருக்குப் புத்தர்தடுத்தலா லிடையூறுண்டாகாமல் அப்பிள்ளையாரை யணைந்துள்ள அடியார்களுக்கே இடையூறுண்டாயினமையறிக. சூரியனுக்கும், மேகத்துக்குமிடையே காற்றொன்றுண்டாகி அம்மேகத்தை நீக்குதல்போலப் பிள்ளையாருக்கும், புத்தருக்குமிடையி லெழுந்து சம்பந்தசரணாலயரென்னு மெய்யன்ப ரப்புத்தவிருளுடைந்தேகச் செய்தனரென்க. திருப்பதிகமெழுதுமன்பராகிய வப்பெரியோன் புத்தர்களுக்குத்தலையாய புத்தநந்தியின் றலையி லிடிவிழுமாறு பிள்ளையார்கொடுத்தருளிய (அத்திரமாவனவஞ்செழுத்துமே) என்னும் படையைத்தாங்கிச்செலுத்தி வெற்றிபுனைந்தது அப்பிள்ளையாரது திருவுள்ளப் பாங்கிருந்தபடியாம். ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதஸ்வாமிகளும் இப்படியேயன்றோ (தாத்தாசாரி) என்பவன் இடிவிழுந்திறந்தொழியத் திருவுள்ளமிசைந்தனர்? சிவத்துரோகிகட் கிவ்வாறான கெடுதிகளுண்டாதல் ஸாமஞ்சஸமென்க. இது நன்ருய் முடிந்தமையினன்றோ அன்னோர் மீண்டுஞ் சாரிபுத்தனைக்கொண்டு வாக்குவாத முடிப்பித்துத் தோற்றுப் பின்னர்த்தெ

ளிந்து யாவருஞ் சைவத்திற்புக்குப் பிள்ளையாருக்குத் தொண்டர்களாயினர்? இதனால், பிள்ளையார் அமணவாதமே யன்றிப் புத்தவாதமுமுடித்து உலகை யுய்வித்தனரென்பது வியக்தமாயிற்று.

இனிப்பிள்ளையார் அப்பர்சுவாமிகளைநோக்கித் திருப்பூந்துருத்திக் கெழுந்தருளிய அருமையைக்கூறுதும். இத்தலம் "பூந்துருத்தி பூந்துருத்தியென்பீராகிற்-பொல்லாதபுலாற்றுருத்தி போக்கலாமே" என்னும் விளக்கமுடையது. இந்தலத்தைநோக்கிப் பிள்ளையார் அப்பர்சுவாமிகளைத் தேடிவருகையில் அப்பர்சுவாமிகள் பிள்ளையாரும், ஏனையோருமறியாதபடிப் பிள்ளையாரது அடியவர் திருக்கூட்டத்தினுட்புக்கு அவரேறிவருஞ் சிவிகையைச்சுமந்து அரியபேறு தமக்குக்கிடைத்ததென்னு மாநந்தமேலீட்டா லிறுமாந்து நடந்தனரன்றோ? அப்பர்சுவாமிகளுக்கும் பிள்ளையாருக்கும் பேதமின்றாயினும் பிள்ளையாரை அப்பர்சுவாமிகள் சுமந்து அன்புபாராட்டியது தம்மில்வேறுபாடின்றி விளங்குஞ் சிவசத்திகளிற் சிவத்தைச் சத்தியாகிய வுமையம்மை காஞ்சியில்வழிபட்ட வன்புடைமையோடு தலைகூடிச் சிறக்குமென்க. பிள்ளையார் அருளைவிளக்கவும், அரசுகள் அன்பைவிளக்கவுமீபோந்த பதியினதுமூர்த்தங்களாம். அமலமூர்த்திகளிருவருமொருவரிலொருவ ருயர்வுதாழ்வுகளெய்தாத முடிவறிந்தேயன்றோ "அறத்தாறிது வெனவேண்டாசிவிகை, பொறுத்தானோடூர்ந்தானிடையை, மறுத்தார்சம்-பந்தன்சிவிகைபரித்தார்திரிருவர்மற், றுத்துஞ்சிவிகையினையூர்ந்து." என்னுந்திருவெண்பாவில் வாய்மையை நிறுத்தினர் மேலோர்? நல்வினையாற் சிவிகையேறுதலும், தீவினையா லதனைச்சுமத்தலு முயிர்களுக்கநுபவம். ஞானஸம்பந்தரை வாகீசர் சுமந்தமையாலன்னோர்பா லுயர்வுதாழ்வுகள் கற்பித்தல்கூடாது. கூடாதபோது அத்திருக்குறளிழுக்குமன்றோ? அன்பின்மிகுதியால் வாகீசர்செய்தது அத்திருக்குறளுக்கு விஷயமாகாதெனின், அன்புடைமையால் வாகீசர்செய்ததுபோல் பிள்ளையாரும் ஏன்செய்திலர்? இதனால், பிள்ளையார் யோக்யதை விசேடித்தமையே அவரைவாகீசர் சுமந்ததற்குக்காரணமெனலமையும். அங்ஙனங்கொள்ளினும், (மறுத்தார்சம்பந்தன்சிவிகை பரித்தார்) என்பது அவலமாம். இனிமுடிவுத்தான் யாதெனின், இருமுதல்களும் பதியினது விபூதிகளாகையால் விரோதமில்லையென்றறிக. இந்தவிபவஸ்தையால் திருக்குறளுக்கும், அதனையடுத்துவந்த மற்றத்திருவாக்குக்கு மிழுக்குண்டாயினதில்லையறிக. இன்னும் விரிக்கிற்பெருகும். மேல், ஈமதுகாழிவிரகர் திருவோத்தூ

ரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கியது அவர் யாவுஞ்செய்யவல்லாரென்பதை விளக்கியது. சுட்டவெலும்பினைப் பெண்ணாக்கியதும் அவரது வல்லபமாகையால், பரமபதியாகிய அவரதுசெயல் ஆன்மாக்கள் அவர்பதியாந்தன்மையறிந்து பிழைத்தற்கேயாம். இத்தகைய வரியசெயல்கள் எல்லாம் வல்லஸித்தராயெழுந்தருளிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானது திருவிளையாடல்களாகவன்றோ உண்மைநூல்களில் படிக்கப்பட்டிருக்கின்றன? சிவனொருவனேயன்றி இவ்வரியசெய்கைகள் சீவர்க்கள் செய்யமுடியாமைகாண்க. சிவனடியார் சிவனது அநுக்ரகத்தாற் செய்வாரெனின், அப்போதும் ஓரிடத்தையதிட்டித்துச் சிவனேசெய்கின்றாரென்பது நிலைபெறுமேயன்றிவேறில்லை. சிவனோரிடத்தையதிட்டித்துச் செய்வதற்குந் தாமேசெய்வதற்கும் பேதங்களுள. தாமேசெய்யுமத்தனை கனமானகாரியம் ஓரிடத்தை யதிட்டித்துச் செய்தவின்று. அதிட்டிக்குமிடத்திற்குத் தக்ககாரியங்க ளாங்காங்கு நடைபெறுமென்க. அரசனொருகாரியத்தைச்செய்தலும் அவன் தனது அதிகாரத்தை மந்திரிமுதலாயினோரிடஞ்செலுத்தி யொருகாரியத்தைச் செய்வித்தலு மொன்றுதல் யாங்ஙனம்? ஆண்டவன்செயலுக்கும், அடியாரதுசெயலுக்கும் பேதம் வியக்தமாயினமையால், நமதுபிள்ளையாரதுசெயலை அடியவரது செயலாகநினைப்பது பேரபராதமாம். "தவந்தவென்பினைப் பெண்ணெனப் படைத்துஞ்சார்மழவ, னுவந்தபெண்ணுயிரளித்து மொட்டாதெதிர்புத்த, னிவந்தசென்னியையுருட்டியு முத்தொழினிறுவிப், பவந்துடைத்துயிர்க்கருளுஞ் சொற்பனவனைப்பணிவாம்" என்னுமான்றோருரையை யினிதுகவனித்துப் பிள்ளையாரது பதிநிலைமையைத் தெளிதலே யமைவுடைத்து. இதனை முன்னொரு ஸந்தர்ப்பத்தினும் பிரகாசப்படுத்தியுள்ளேம். ஆண்டுங்கண்டுணர்க. இங்ஙனநிற்க.

பிள்ளையார் ஸ்ரீகாஞ்சிக்கு எழுந்தருளித் திருவேகம்பம் - திருமேற்றளி-திருமாற்பேறு முதலியவைகளைத் தரிசித்துக்கொண்டுவேறுபதிகளுக்குஞ் சென்றுவைகிப் பின்னர்த் திருவாலங்காட்டை யடைந்தாரென்று நாம்வியந்து துதிப்பதன்முன்னர், அப்பிள்ளையார் திருமேற்றளியில் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பியமளித்த மகிமையை விசாரித்து அப்புறஞ்செல்லுதேம். இவ்விஷயத்தை இந்த நூலில் (நுகூ) வது பக்கத்தில் சூசித்திருக்கின்றோம். விஷ்ணுவாளவர் சிவசாரூப்பியம்வேண்டிச் சிவனைநோக்கித் தவஞ்செய்கையில், சிவன் அவருக்குவெளிப்பட்டு நீவேண்டிய ஸாரூப்பியம் எமது திருக்கு

மாரனாகிய சுப்பிரமணியன் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தனாக அவதரித்து உன
க்குப்பிரஸாதிப்பான் என்று அருளிச்செய்து மறைந்தருளினர். அ
ப்படியே அது விஷ்ணுவுக்குக் கைகூடியது என்று ஸநற்குமாரஸ
ம்ஹிதையிற் போந்தவாய்மையே மீண்டு விசாரிக்கத்தக்கது. விஷ்
ணுவானவர் வேதங்களில் "ஏகோஹவை நாராயண ஆஸீத்" எனவும்,
"நாராயண பரப்ரஹ்மா தத்வம் நாராயணஃ பரஃ" எனவும் பிரதிபா
திக்கப்பட்ட பரமமூர்த்தியாயுள்ளவர். இத்தகைய மகிமைசிறந்த
நாராயணருக்குப் பிரஸாதிக்கும் அருணலஞ்செறிந்து விளங்குமா
ற்றலுடையவராக எமதுபிள்ளையார் சிறந்திடுவாரெனின், அவரைப்
பரமபதியென்னாது வேறுயாவரென யாம்துணியவல்லேம்? இவர்
பரமபதியென்பதை வேதப்பிரமாணத்தைக்கொண்டே நிரூபிப்பா
ம். உபநிஷத்துக்கள் நூற்றெட்டனுளொன்றாகிய கிருஷ்ணோபநிஷ
த்தில், "அஷ்டாபஷ்ட ஸஹஸ்ரேத்வே சதாதிக்யாஃ ஸ்த்ரியஸ்ததா"
என்றது முதலிய பகுதிகளால் பதினாறாயிரம் இருடிகளது பிரஸ்
தாபம் கேட்கப்படுகின்றது. இவ்விருடியர் பதினாறாயிரவரும் வி
ஷ்ணுவை இராமாவதாரத்தில் தமக்கின்பம்வேண்டி ஆலிங்கனஞ்
செய்துகொண்டார்களெனவும், அப்போது இன்பமுண்டாகாமை
யால், அவர் கிருஷ்ணவதாரஞ்செய்தபோது கோபிகைகளாகப்பிற
ந்து ஆலிங்கனஞ் செய்துகொண்டார்களெனவும், அப்போதும் இ
ன்பம் பெருகவில்லையெனவும் வெளிப்படுகின்றது. இதனால், எமது
பிள்ளையாராகிய ஸ்ரீஸம்பந்தநாதரை அவ்விருடியா பதினாறாயிரவரு
மடைந்து அவரது பாதஸேவையால் இன்புற்றாரெனப் பெரியோர்
கூறுகின்றனர். பதினாறாயிரம் இருடியர் என்னும் ஸங்கேதம் இந்த
வுபநிஷத்திலும், எமது பிள்ளையாரது புராணத்திலுமேயன்றி வே
றெங்குங்கிடையாது. உபநிஷத்தில் அவர்களைப் பிரஸ்தாபித்ததே
யன்றி, அவர்களது அபீஷ்டஸித்திக்கு ஓர் முடிவுகூறவில்லை. அத
ற்குமுடிவு பிள்ளையாரது புராணத்தில் வியக்தம். இதனால், அவ்வி
ருடியர்க்கு இன்பத்தைத்தருமாறு பிரவர்த்தித்த வுபநிஷத்து பி
ள்ளையாரது சரித்திரத்திற் பரிவஸாநமுறலால் அதனது ஹ்ருதய
ம் இனிது வெளிப்பட்டது. பிள்ளையாரால் அவர்க்கின்பமுண்டாயி
னமையை இவ்வுபநிஷத்து ஏன்கூறவில்லையெனின், கிருஷ்ணர்பா
மாகவெழுந்த அது வேறொருவர் பரத்துவத்தை அந்தக்கிருஷ்ண
ருக்குத் தாழ்வுண்டாக விளக்குவது யாங்ஙனம்? அதனால், அது
வாளாவிட்டதென்க. என்னை? வேறு உபநிஷத்தாற் பிள்ளையாரது

பரத்துவத்தை நாட்டாததெனின், பிள்ளையார் அடியவர்கோலங்
கொண்டமர்ந்த பரிசுகண்டெனக. இந்தரஹஸ்யங்களை யுணர்ந்த
பேர் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தர் பதியினது அருட்கோலமூர்த்தமா யுள்ள
வரெனவறிந்தின்புறுவர். இதனையொப்பாதபட்சத்தில் அவ்விருடி
யர் தாம்விரும்பியபேறு எய்தாது அவலராயினரெனலமையும். இ
வ்வளவு ஸாமாணியர்களை உபநிஷத்துப் பிரஸ்தாபித்ததும் அவல
மாம். நூற்றெட்டுக்குமேலும் உபநிஷத்துக்க ளுளவாகையால், அவ
ற்றுள்யாதானுமொன்றிற் கதியுண்டாகலாமெனின், அந்தக்கதி எம
து பிள்ளையார்விஷயமாக வனமையாது? பூர்வபட்சிகள் இனிக்க
ண்டுபிடிக்கு முபநிஷத்தே எமக்கும் ஆதரவாயிடத் தட்டில்லையா
கையால், அவ்விருடியர்க் கின்பநலங்கைகூடிய பெருமையையுணர்
த்துந் திவ்யசரிதையை ஆச்சிரயித்தின்புறுது அவலத்தழுங்கல் பு
ண்ணியக்குறைவுடையார்க்கே சிறக்கும். இதனால், பதினாறாயிரம் இ
ருடியர்க்குச் சிவப்பேறுதவிய நமது குருநாதர்மான்மியம் கிருஷ்
ணோபநிஷத்தினது ஹ்ருதயமாக முடிந்தமையால், அவ்வருளாளர்
ஸ்ரீவிஷ்ணுமூர்த்திக்கு ஸாரூப்யத்தைப் பிரஸாதித்தாரென்பதும்,
அதனால், அவர் பரமபதியாயினரென்பதும் சாஸ்திரமறிந்த ஸத்து
க்கள் துணிந்து கூறும் பரமஸித்தாந்தமாயிற்று. இன்னும் விரிக்
கிற் பெருகும்.

இனிப் பிள்ளையார் திருவாலங்காடு அம்மையார் தலையானடந்
த பதியாதனோக்கி அதனைமிதிப்பதுகூடாதென அங்குத் தமதுதி
ருப்பாதத்தைவையாமல் அகன்றது அம்மையாரது அன்புடைமை
யும், அருமையும், உலகம் அவரைமிகமதித்து வழிபடுதற்குரியபெ
ருமையும் நிலைத்தற்பொருட்டு. சிவபெருமானே அவரை (அம்மையே)
என்று அழைத்தாராகையால், அவரதுபெருமை அளவிடற்கரிய
தென்க. இதுவே கண்ணப்பதேவர்பாற் பிள்ளையார்கனிந்தநலத்தை
விசாரிக்குமிடத்துஞ்சிறக்கும். பிதாவானவன் தன்னுடைய அரிய
குழந்தையினது காலையெடுத்துத் தனதுசிரசிலும், முகத்திலும்,
மார்பிலும், தோளிலும்வைத்து ஸந்தோஷிக்குமநுபவ முலகினிகழ்
கின்றமையால், அன்பிற்சிறந்த கண்ணப்பரை எமது பிள்ளையார்
பரிந்து வியந்து மகிழ்ந்தனரென்க. ஞானசம்பந்தர் அம்மையாரை
யும், கண்ணப்பரையும் அருமைபாராட்டியதனாற்றானன்றோ அவர்
களதுபெருமை யுலகினிலைபெற்று, அவர்களையுலகம்வழிபடவேதுவா
வாயிற்று? பாணபத்திரருக்காகச் சிவபெருமான் விறகுவிற்றது தா

ழ்வாங்குமோ? அவரது அன்புமருமையும் வெளிப்படவேயன்றோ ஸ்வாமி அத்திருவிளையாடல் புரிந்தருளியது? இவைகளையோசித்து ஸாதுக்களாவார் பிள்ளையாரது பெருமையைவியந்து குணப்படுவாரென்க. இவ்வமலதேசிகர் திருமயிலையின்கண், சுட்டவெலும்பைப் பெண்ணாக்கியது அருட்சீர்த்தியாதலை மேலேவிரித்தாம். அன்றியும், ஏடு நெருப்பினீறாகாது நிலைக்குமா என்று நமதுகவிநண்பர் முன்னே கடாயினவாறு பசுமையொழிந்து நெருப்பாலழிந்தவெலும்பு சுரமெய்தித்தழைத்தலும், இயமன்கைப்பற்றியவுயிர் மீண்டுமதிற் புகுந்து விளையாடலும் யாங்ஙனமெனக்கடாவுங்கால், அதற்கு யாமளிக்குமிறையைத் தமக்குக் கிடைத்த இரையாகக்கொண்டு அன்னோரொதுங்குவாராக. என்னெனின், மஞ்சளு நீலமுஞ்சேர்ந்தால் பச்சையுண்டாகும். மஞ்சளுங் கரியுஞ்சேர்ந்தால் பச்சையுண்டாகுமா? அப்படியே மஞ்சளுஞ் சுண்ணமுஞ்சேர்ந்தால் செகப்புண்டாகும் மஞ்சளுங்கொட்டியுஞ் சேர்ந்தால் செகப்புண்டாகுமா? எது எதனோடுசேர்ந்தால் எது உண்டாகுமோ அதுவேயன்றோ உண்டாகும்? அதனால், சுட்டவெலும்பும், ஞானஸம்பந்தரது திருவாக்குஞ்சேர்ந்து ஓர் பெண்ணாகியதென்க. அச்சுட்டவெலும்பு வேறு பொருளோடுசேர்ந்தால் பெண்ணாகுமா? செம்பைப் பொன்னாக்குமாற்றல் ரஸகுளிகைக்கேயன்றி வேறு பொருளுக்கில்லாமையைப்போலச் சுட்டவெலும்பைப் பெண்ணாக்குமாற்றல் பிள்ளையாரது திருவாக்குக்கேயன்றி வேறு எதற்குமுண்டாகாதென்க. பிள்ளையார் திருவருள்வடிவினராதலின், அவரது திருவாக்கு யாவுஞ்செய்ய வல்லதென்க. அவரது திருவாக்குக்கு மகிமையுண்டென்பது நிஜமாயின், அதனையெடுத்து நாமோதுங்கால் அது பயன்றராததென்னையெனின், அவரது திருவருளையெய்தியோதிற் பயன்றருமென்க. அரசனது அருள்பெறாது அரசனது முத்திரையைத்தாங்கியொருவன்வெளிவருவதனானே யாதுபயன்? அவனது அருள்பெற்றோர்க்கன்றோ அவ்வரசனது முத்திரை பயன்படும்? அருள்பெறுதலாவது அரசன் றனதுள்ளத்திலவனைத் தன்னவனெனக் கோடல். அப்படியே பிள்ளையார் தமதுதிருவுள்ளத்தில் இவன் நமதடியவனெனக் கோடலே அவரது திருவருளைப்பெறுதலாம். அன்புமுறுகி வளர்ந்தபேர்க்கன்றி அவரது அருளிவ்வுள்ளத்திற்படிதல்கூடாது. இவ்வுண்மைதேர்ந்து (பிள்ளையார் திருவாக்கையோதி) புத்தநந்தியின் றலையிடிப்போகத் திருவுள்ளமிசைந்தருளியஸம்ப

ந்தசரணாலயர் மர்ம்மியத்தை யுணர்ந்தடங்குக. விரிக்கிற்பெருகும். என்பு பெண்ணுருக்கொள விசைந்தோதிய வத்திருவாக்கில் சிவபெருமானுடைய அடியார்களைத் திருவமுதுசெய்வித்தலும், அவருடைய திருவிழாவைத் தரிசித்தின்புறுதலுமாகிய நலங்களே செறிந்தமையால்; முதற்கட்போந்தது சங்கமவழிபாடும், பின்னர்ப்போந்தது தாவரவழிபாடுமாயின. (தாவரசங்கமங்க ளென்றிரண்டுருவினின்று மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்)என்னும் பிரமாணமும் நிலைபெறுகிறது. இதனால், உயிர்களுக்கின்றியமையாத பெருஞ்சிறப்புக ளிவையே யென்பது திண்ணம். இவற்றின் மேலாயதொரு பேறுமின்றென வறிந்தின்புறுதலே யெமதெண்ணம். இவ்வருணாலயம் யாமெய்துமாறுகூட்டிய பிள்ளையாரது பதசேவையை விடாது பற்றி யிறுமாந்திடும் யாம் மற்றப்பகுதிகளையும் விசாரித்துரைப்பாம்.

பிள்ளையாரது பிரபாவம்.

(கஅக) பக்கத்தொடர்ச்சி.

பிள்ளையார் சீகாழியி லெழுந்தருளி யிருக்கையில், சிவபாத விருதயரும், ஏனையருங்கூடி அவரையணைந்து, தேவரீர் எங்கள் பொருட்டு வைதிகந்தழைத்தோங்குமாறு திருக்கல்யாணஞ்செய்து கொள்ளவேண்டுமென்று பலதரம் வணங்கி இரந்துகேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிள்ளையா ரிதிலிசைந்தருளினர். உடனே திருநல்லூரில் அந்தணர்குலதீபமாய்விளங்கிய நம்பாண்டார்நம்பி என்பவரது திருமகளாரை மணம்பேசி முடிவுகொண்டு பிள்ளைவீட்டார், பெண்வீட்டாரிருவரும் ஸ்வாமியினது திருக்கலியாணவிஷயமான முயற்சியையும், மற்றுமாகவேண்டிய காரியங்களையுஞ் செய்துவருவாராயினர். சுபகாரியங் குவிந்தபின்னர் முகூர்த்தம் வைத்து ஸமாவர்த்தனம்-இரக்ஷாபந்தனம்-நித்தியகரும முதலியவைகளை நடத்தினார்கள். பின்பு ஸ்வாமி திருமணக்கோலம்பொலியத் திருப்பல்லக்கின்மீது ஆரோகணித்துக்கொண்டு திருநல்லூருக்குச்சென்று அங்கு[illegible] (திருப்பெருமணம்) என்னும் ஆலயத்திற்புக்கு வணங்கித் திருப்பதிகம்பாடிக்கொண்டு வெளியில்வந்து அங்கு அமைந்திருந்த [illegible]தியாகிய திருமடத்திற் சென்றிருந்தனர். பின்னர் அந்தணர்கள் அவரைத் திருமஞ்சனநீராட்டி வஸ்திராபரண

தடங்கிக்கிடக்கு மிருளுமன்றோ மோட்ச நலமாகிய பாசவொழிவை யினிதுவிளக்கும்? இவ்வுண்மைதேராது விபரீதம் பேசியது வீண்பிரஸங்கமாய்முடிந்தது. சைவ நூல்களின் முடிபுணராது கழக்குரைபேசுஞ் சண்டிகளோடு விவகரிப்பது கஷ்டம்! கஷ்டம்!!

சைவர்,—இல்லாத ஜகஜீவபரங்கள் கற்பிக்கப்பட்டவா றென்னை? அங்ஙனங் கற்பிக்கப்பட்டவை மீண்டுங் கழலுமென்பதென்னை? பின்னர் கழலத்தக்கவை முன்னர் கற்பனையானவா றென்னை?

மாயாவாதி,—நிழலினது ஆரோக்யம் வெய்யலிலிருந்தவனுக் கன்றோ தெரியும்? அங்ஙனமிராதவனுக்கு அதனது அருமை புலப்படுமோ? இருளில்லாவிட்டால் ஒளியினது விசேடம் நன்குபுலப்படுமோ? விவகாரத்தினின்னுஞ் சுகசிலர்கள் கற்பிக்கப்படாவிட்டால் அவற்றின் பிரதியோகியாகிய பிரமலட்சியம் அறிவிலிகட்கு நன்குபுலப்படுமோ? இங்ஙனம் பிரமலட்சியம் வரைப்படுத்துணர்த்துவான் கற்பிக்கப்பட்ட அபாவமாகிய ஜகஜீவர்கள் பின் விசாரணைசெய்தவழி நிலைநிற்குமா?

பிரமம் ஒன்றேயுள்ளதும், அதற்கிரண்டாவது கிடையாதென்பதும் மாயாவாதிகள் துணிபன்றோ? ஜகஜீவபரங்கண் மூன்றும் ஏகமாகிய பிரமமாகாவன்றோ? இரண்டு என்னுஞ் சொல்லுக்கே யிடங்கொடாத பிரமத்துக்கு முன்னர் ஜகம், ஜீவன் பரம் என்னும் விவிதங்கள் முளைத்தவாறென்னை? என்று பல வினாக்களை யெம்மனோர் வினவியது யுக்தமே! இங்ஙனமாக, நிழலினது ஆரோக்யம் வெய்யலிலிருந்தவனுக்கன்றோ தெரியும் எனவும், இருளில்லாவிட்டால் ஒளியினது விசேடம் புலப்படுமா எனவும் பிரஸ்தாபித்துச் சமாதானங் கூறிக்கொண்ட அவர் தடிப்புத்திக்கு நாமென்ன செய்யலாம்? அவர் கூற்றின்படியே வெய்யலினது அபாவம் நிழலும், ஒளியினது அபாவம் இருளுமாகின்றனவன்றோ? இவ்விரண்டுங் [illegible]ப் பொருள்களாகையால் அதுபொருந்தும். பிரமம் அகண்டிதமாகையால் அதனபாவமே ஜகஜீவபரங்களென்றல் இழுக்காம். வெய்யிலில் நிழல் [illegible]யில் அந்த நிழல் ஒன்மைப்- அல்லது வேறுபொருளை யாச்ரயித்துள்

11

டாவதன்றித் தானே யுண்டாகாது. வெய்யில் - மரம் - இடம் - நிழல் இவற்றிற்கு வேறாயுள்ள வொருவனே ஆரோக்யத்தை யனுபவிக்கவுரியவன். இவ்வுபமான த்ருஷ்டமாகிய பிரமத்தினிடத்தில் அவ்வாபாசகர் கூற்று எங்ஙனோநிலைக்கும்? மரத்தினது நிழல் வெய்யிலிருந்தபோது பூமியினிடத்துண்டாகையால் பிரமத்தினது நிழல் எது இருந்தபோது எதனிடத்திலுண்டாயிற்று? மரத்தினது நிழல் மரமிருந்தபடியே தழைந்து கிளை முதலியவற்றோடுண்டாகின்றமையால், அப்படியேயன்றோ பிரமசுபாவத்துக்கு வேறாகாமல் பிரமத்தினிழ லுண்டாகவேண்டும்? பிரமத்தினிழலென்று சண்டமாயாவாதி யுரைத்தது ஜகஜீவபரங்களே யாகையால், இந்த நிழல் பிரமசுபாவத்துக்கு வேறானதன்றாகவேண்டும். அன்றியும், ஜகம் என்பது கேவலஜடப்பொருளும்; ஜீவன் என்பது கிஞ்சிஜ்ஞத்வாதி யுபாதியுடையதும், பரம் என்பது ஸர்வஜ்ஞத்வாதி யுபாதியுடையதுமாகு மிலக்கணங்களை அன்னோர் கூறுவதுண்டாகையால், இம்மூன்றையுமுடைய சுபாவசித்ததாகவே அதிஷ்டானமாகிய பிரமமும் நிச்சயிக்கப்படும். ஜகஜீவபரங்கள் மூன்றும் ஆபாஸமாகிய நிழலாகுங்கால் அந்தநிழலினிடத்துண்டாகும் ஆரோக்யத்தை யெந்தப்புருஷனோ அனுபவிக்கத்தக்கவன? ஏகமாகிய பிரமமொன்றையே சாதிக்கவெழுந்து அதிகாரமில்லாதது, உருவமில்லாதது, குணமில்லாதது, மலமில்லாதது என்பனவாதி யிலக்கணங்களைக் கூறிவிட்டுப், பின்னர் ஜகஜீவபரங்களாகிய விகாரங்களையும், நிழலுண்டாதற்கேதுவான வுருவத்தையும், ஜடத்வம்-கிஞ்சிஜ்ஞத்வம்-சர்வஜ்ஞத்வம் என்னுங் குணங்களையும், உபாதிவசப்பட்டு வருந்துதற்கிடமான மலத்தையும் அவர் கடைப்பிடித்தொழுகுங் கூற்று அந்தோ கொடிது! கொடிது!! இது என்போலுமெனின், பஞ்சபாண்டவரை நான் அறியேனா கட்டில்கால்போல என்று' வாயாற்கூறி, மூன்று விரலைக்காட்டி, இரண்டுவிரலைக் கீழே தாழ்த்தி, ஒருவிரலாற் பூமியிற் கோடிழுத்த அவிவேகி யொருவன் செய்கைபோல்வதேயாம். இப்படியே அவர் காட்டிய ஒளியிருள்களின் திட்டாந்தமும் விசாரமுகத்து அலைப்பட்டழியும்! அழியும்!!

இது நிற்க, நிழலின்றி ஆரோக்யம் வெய்யிலிலிருந்தவனுக்கன்றோ தெரியும் என்று அவர்கூறிய நியாயம் வாயாற் சிரிக்கத்தக்கதன்றாம். ஒருவன் பூர்வஜந்ம விசேஷத்தால் சகல சௌக்யங்களையுங் குறைவின்றி யநுபவிக்கத்தக்க பாக்யவானாகுகையில் அவனுக்

கு அந்த ஸௌக்யத்தினருமை புலப்படுமாறு இடையில் தரித்திர
முண்டாகவேண்டுமென்று இழவெடுக்கவந்த அம்மாயாவாதியை
யென்ன செய்தாற்றான் றீரும்? கன்மங் காரணமாகவே ஸௌக்யா
ஸௌக்யங்கண்முதலிய போகங்களுண்டாகு மென்று வேதாதிக
ள் கூறுமுண்மையையறியாத கொடுமையால் அவர்பிதற்றியது பெ
ரும்பேதமைத்தே! ஒருவன் செல்வவானாகவும், ஒருவன் தரித்திர
வானாகவும், ஒருவன் எசமானனாகவும், ஒருவன் அடிமையாளாகவு
ம், ஒருவன் தண்டிகை ஏறுபவனாகவும், ஒருவன் அதைச்சுமப்ப
வனாகவு முண்டாயிருக்கும் விசித்திரம் யாதென்று எழும் வினாக்க
ளுக்கு இப்படிக் கடவுள் சிருட்டியாவிட்டால் உலகம் நடக்குமா
வென்று சமாதானங் கூறும் ஊணர் மகமதியர் செய்கைபோபொப்ப
மாயாவாதியுரைப்பது ஆச்சரியம்! ஆச்சரியம்!! கன்மமென்பதொரு
பொருளை யங்கீகரியாமையால் ஊணர் முதலினோர் அங்ஙனம் பித
ற்றுத லொக்கும். (அறத்தாறிதுவென வேண்டா சிவிகை- பொறுத்தானோ
டூர்ந்தானிடை) என்னும் பிரமாணத்திற் கட்டுண்டு விவகாரத்திலேனு
ம் யாம் வைதிகர் என்று கூறித்திரியும் மாயாவாதிகள் அங்ஙனம்
பிதற்றுத லெங்ஙனங் கூடும்? அன்றியும். பிரமலட்சியம் அறிவிலி
கட்குப் புலப்படுமா என்று வினவினராகலின், அவ்வறிவிலிகள் யா
வர்? ஜகஜீவபரங்கள் நிழலாய் முடிந்தமையால் அவற்றை யனுபவி
க்கும் புருஷர் வேறுவேண்டும். அவர் ஜகஜீவபரங்களிற் சிலரேயெ
னின், நிழல் வேறுதேடவேண்டும். ஜகம், பரம் என்பவைகட்குங்
கதிதேடவேண்டும். ஒன்றுமில்லாத பிரமத்திற் கற்பிக்கப்பட்ட ஜ
கஜீவபரங்களைப் பின்னர் விசாரித்தழி யில்லாமற் போய்விடுமென்
றுரையாடிய அவரேழைமதியையுங் கொஞ்சம் விசாரிப்பாம். அவற்
றை விசாரிப்பவர் யாவர்? ஜகமா? ஜீவனா? பரமா? அதிட்டான
பிரமமா? அனுபவத்திற் சிலர்களே விசாரிக்கையால் ஜீவன் தன்
னை விசாரித்துத் தன்னையும், தன்னோடு விசாரிக்கப்படும் பரம்-ஜக
ம் என்பவைகளையும் அபாவமாக்கிக்கொள்ளும் பெருமை சாலவழ
குடைத்தே! அதிட்டானபிரமம் விசாரிக்கின்றதெனின், விகாரியெ
ன்பது பெறும். அல்லாமலும் பரமே தன்னிழலை படைத்தனுபவிக்
கும் புருஷர்களை விசாரித்து அபாவமாக்குதல் கூடும். இப்படி வி
[illegible] பெற்றழியு மற்பமானங்களா லவர்கட்டப்போகத வரிறைய
[illegible] தன்மை சித்திக்காமையால், சேவலிங் பக்ஷபிரியராக
ளென்றே அவரைத் தீர்மானிக்கவேண்டியது. மரம், மரத்தினிழல்

அதையடைந்தனுபவிப்பவர் என்னும் பகுதிகள் விசாரித்துழி நிலைபெறுதல்போலவே யன்றோ பிரமமுதலிய பதார்த்தங்களும் விசாரணையிற் கெடாது நிற்கும்? மரம் அழிந்தபோதன்றி நிழல் அழியாதாகையால், பிரமம் அபாவமான காலத்தன்றி அதனாலுண்டாகும் ஜகஜீவபரங்களும் அபாவமாகாவெனவறிக. வெய்யல் மிகுந்த வோரிடத்தில் நிழலில்லாதபோது அங்கு மரமில்லையென்று தீர்மானிக்கிறபடியே யன்றோ ஜகஜீவபரங்கள் அபாவமாகிற காலத்திலவைற்றினதிட்டானமாகிய பிரமமும் அபாவமாயிற்றென்று தீர்மானிக்கவேண்டியது? ஒன்றுமே யில்லாமற் போய்விடுகிற சூனியவாதமாக முடிந்த அம்மாயாவாதம் எங்ஙனே நிலைக்கும்? இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—பால் தயிரானதுபோல் பிரமம் பிரபஞ்சமாகப் பரிணமித்ததுண்டெனின், மீண்டுந் தயிர் பாலாயிடினன்றோ பரிணமித்த பிரபஞ்சம் பிரமமாயிடும்?

மாயாவாதி,—தயிரைப் பசுவுக்கு ஊட்டினால் மீண்டும் அது பாலாகும்.

தயிர்மாத்திரந்தானே பசுவுக்கு ஊட்டினால் பாலாகும்? எந்த வசுத்தநீரேனும், பண்டமேனும் பசுவுக்குணவாகுங்காலவையும் பாலாகுமாகையால் தயிரைமாத்திரமுரைத்தது தவறாகும். பால்மாத்திரமே யன்றி வேறு பொருள்கள் தயிராகாமையால் விருத்தோபமானங்கொண்டதும் விரோதித்தது. இன்னும், தயிரைப்பசுவுக்கு ஊட்டி அதை மாத்திரம் பிரித்துப் பாலாகவெடுத்தல் கூடுமோ? ஓரிடையன் தயிருண்டிருந்தபோது அவன் வயிற்றைக்கீறிச் சோதித்த பண்டிதர்கள் எருமைப்பால் இவ்வளவென்றும், பசுவின்பால் இவ்வளவென்றும் பிரித்துரைத்தனரென்று அம்மாயாவாதியோரிடத்திற் கூறியிருக்கிறபடியே ஓர் பசுவினிடங் கறக்கும் பாலில் தயிரிலுண்டாகிய பால் இவ்வளவென்றும், மற்றையுணவுகளாலுண்டாகிய பால் இவ்வளவென்றும் பிரித்துக்காட்டுதல் கூடுமோ, கூடாதோ தெரியவில்லை. இடையன் வயிற்றில் தயிரைக்கண்டு இன்னின்னபாலின் சம்பந்தமுடையது இத்தயிரெனக் கூறினதொழிந்து அந்தந்தக் கூறுகளைத் தயிரிலிருந்து பாலாக்கிக் காட்டினதுண்டா? இவராவது தயிரைப் பாலாக்குவாரா? கோ[illegible]லபால் எளிதிற்கிடைக்கை

பால் தயிரை மீண்டும் பாலாக்குவ தவசியமன்றெனின், அநுபவத்து க்கு வந்திராத விஷயத்தை யாசரிப்பது கூடாது. இங்கே யெடுத்துக்கொண்ட வுபமானம் பிரமம், பிரபஞ்சம் என்பவற்றை விளக்குவதொன்றாகையா லின்னுங் கொஞ்சம் அதை விசாரிப்பாம். பிரமம் பிரபஞ்சமாயிற்று. பால் தயிராயிற்று. பாலானது பிரைக்குற்றத்தாலன்றோ தயிராயிற்று? தனக்கிரண்டாவதில்லாத பிரமம் எந்தக்குற்றத்தாற் பிரபஞ்சமாயிற்று? தயிரைப் பசுவுக்கூட்டினா லன்றோ மீண்டும் பாலாகும்? பிரபஞ்சத்தை யெவ்வாறுசெய்தா லதுமீண்டும் பிரமமாகும்? பிரபஞ்சந் தானேவிசாரித்தாற் பிரமமாகு மென்பார் போலும். பால், தயிர்களுக்கு அவற்றைப் பரிணமிக்கச் செய்பவன் வேறானாற்போலப் பிரமம், பிரபஞ்சமென்பவைகளுக்கும் அங்ஙனஞ் செய்பவன் வேறாகவேண்டும். அஃதின்மையின், அவரெடுத்துக்கொண்ட வுபமானம் அவரைத் தெருவில்விட்டது.

சைவர்,—மாயையிலுண்டாகும் பிரபஞ்சம் மாயையிற்றானே யொடுங்கி மீண்டுங் காரியப்படும்.

மாயாவாதி,—மரத்திலுதிர்ந்த விலைகள் அம்மரத்திற்றானே யொடுங்கி மீண்டும் வருவதுண்டோ? இங்ஙனங்கேட்ட வுலகாயதனைநோக்கி அம்மரத்திற்குக் காரணமாகிய பிருதிவியிலொடுங்குமென்று சைவநூல்கள் கூறுவதென்னை?

இந்த வினாவிடைகளால் அம்மாயாவாதிக்கு ஆதரவுண்டானதாகப் பொங்கி யெழுந்தனர். எங்ஙனமெனின், மரத்திலுதிர்ந்த விலை மரத்திலொடுங்காமல் மண்ணிலொடுங்கலால், அப்படியே மாயையிலுண்டான பிரபஞ்சம் அம்மாயையி லொடுங்காமல் அதற்குக் காரணமான பிரமத்திலொடுங்குமென்று கூறவிடமுண்டாகையால். இன்னும், பாலிலுண்டான தயிர் அந்தப்பாலிலேதானே யொடுங்காமல் அதற்குக் காரணமாகிய பசுவினிடத்தே யொடுங்குமென்று கூற விடமுண்டாகையால். மேலுண்மையை விசாரிப்பாம். சிவஞானசித்தியார் - சுபக்கம், சூத்திரம் (மாயையிலுதித்தவஞ்சம் வருவதுபோவதாகு - நியதியிங்கில்லையென்னி னிகழ்த்திடும்பலிற்றோடு, போயுகும் இலைகளெல்லா மரங்களிற்புக்குப்பேரிற், [illegible] காரணத்தி க்கவாமே.) என்னும் வாக்கியத்தில் அவரெடுத்த [illegible] வாதத்து யுள்ளது. இந்தவாக்கியத்தில் (மாயையிலுள்ளவத்தம் வருவதுபோவதற்கு, நியதிங்கில்லையென்னி னிகழ்த்திடும்பலிற்றோடு) என்பது சித்தாந்தி

யார் கொள்கை. (போயுகுமிலைகளெல்லா மரங்களிற்புக்குப்போதி, ஞலிடு மதுவும்) என்பது உலகாயதன்கொள்கை. (என்னிற் - காரணங்கிடக்கவாமே) என்பது சித்தாந்தியார் துணிவு. இவற்றுள், (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு மரத்திற்குக் காரணமாகிய மண்ணில் அம்மரத்திலிருந் துதிர்ந்த விலைகள் ஒடுங்குமென்று கூறுவதும், அப்படியே மாயைக்குக் காரணமாகிய பிரமத்தில் அம்மாயையிலிருந்துண்டான பிரபஞ்ச மொடுங்குமென்று கூறுவதுஞ் சைவசித்தாந்திகள் கூற்றாக வம்மாயாவாதி கண்டுபிடித்தது அதிசயம்! அதிசயம்!! (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு (அங்ஙன முதிர்ந்த விலைகள் சத்திரூபகாரணமாய் நிலைபேறுடைமையினது மீளத்தோன்றுதற்குரிய பிறகாரணங்களெல்லா மதனோடொருங்குகூடியவழி யவ்வாறே தோன்றும், அல்லுழித் தோன்றாதாகலினது பற்றிக்கடாவென்னை?) என்று திராவிட பாஷ்யகர்த்தர் தமது பொழிப்புரையிற் கூறியிருக்கு முண்மையை யறிந்தடங்குக. இதனால், பிரபஞ்சம் அதற்குக் காரணமாகிய மாயையிலொடுங்காமல் அம்மாயைக்குக் காரணமாகிய பிரமத்திலொடுங்குமென்று சைவர்கூறுவரெனப் பிரமித்தாடிய சழக்குரை சரிந்துபோயிற்று. இனி (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு மரத்தினுதிர்ந்த விலை அதற்குக் காரணமாகிய மண்ணிலொடுங்குமென்று மாயாவாதி பொருள்கொண்ட வலங்கத்தைக் கொஞ்சம் விசாரிப்பாம். பிரபஞ்சம் அதற்குக்காரணமாகிய மாயையி லொடுங்கிமீண்டுங் காரியப்பட்டு வரும் என்பதை நாட்டவேயன்றோ (காரணங்கிடக்கவாமே) என்று ஆசாரியர் கூறினர்? காரணங்கிடக்க வென்கையா லுபாதானமும், ஆமே யென்கையா லதிற்காரியந்தோன்றி வருகையும் பெறப்படுதலறியாது காரியங்களொடுங்குதலையே யாண்டுரைத்ததாகப் பிதற்றியது என்னபேதமை? அதவா அவர்கொண்டபொருளின்படி நோக்கினும், மரம் இலையைத் தந்ததுபோல் மாயை யுலகத்தைத்தரலும், இலை மண்ணிலொடுங்குமாபோல் உலகம் பிரமத்திலொடுங்கலும் [illegible]றப்பட்டு ஒடுங்கின மண்ணிலே நின்று மிலைகள் மீளத் தோன்றும்போலவே யன்றோ வொடுங்கின பிரமத்திலே மீன்றும் பிரபஞ்சம். மீள் த[illegible]ட்டாது [illegible] வுபமானத்தாற் பிரபஞ்சம் பிரமத்தி லொடுங்குவதொ[illegible]றுவதொன்றல்ல வென்றேற்படுங்கால் உலகம் பிரமத்திலுண்டாகின்ற தென்னும் அம்மாயாவாதக்கோள[illegible]சி விழுந்தொழிந்த[illegible] ஒடுங்கின விடத்தினின்றே மீள்வுண்டாமெனனுங் கருத்தால் பிரபஞ்சம் மாயையிலொடுங்கியும், மாயை பிரமத்தி ல[illegible] வருதலா லப்படியே யன்றோ?

மீண்டும் அடங்கியமாயையும், ஒடுங்கிய பிரபஞ்சமும் முறையே ய
வற்றிற் கதிஷ்டானங்களாகிய பிரமம், மாயையென்பவைக ளிடத்தி
ருந்து வெளிப்பட்டுங் காரியப்பட்டும் வருமென்று சைவசித்தாந்த
திகள் கூறும்? இன்னும், மரத்துக்குக் காரணம் மண்ணென்று அ
வர் கொண்ட திருந்தவறுடைத்தே! வித்தில்வழி மண்ணினிடத்து மரந்
தோன்றுதாகையால். இந்தவுபமானத்தால் மரங்காரியமும், வித்து
காரணமு மாகின்றமையால், வித்தினிடத்தன்றோ மரமொடுங்கவே
ண்டுமெனின்; வித்தினது ஸ்தானத்தி லுபமேயமாய் நின்றமாயை ய
வ்வித்தைப்போற் சூட்சுமப்பொருளாகாது கடலைப்போல் வியாபகப்
பொருளாய் நிற்றலி னஃதொருங்கே முழுதும் வித்தைப்போற் பரி
ணமித்து விடமாட்டாது. ஒருவித்தி லோர்மரமே பரிணமிக்கும்.
ஏகமாகிய மாயையி லெண்ணிறந்த வண்டங்க ளுண்டாவதன்றி
மேலுமேலு மளவிறந்த வண்டப்பகுதிக ளுண்டாவதற் கிசைந்த
காரணத்தன்மையு மெஞ்சிக் கிடத்தலால், அத்தகைய மாயையி
லுண்டாகு மண்டங்க ளம்மாயையிலே தானே யொடுங்க விட
முண்டாகும். கடலினிடத்துண்டாகு மளவிறந்த வலைகள் அந்தக்
கடலினிடத்தே தானே யொடுங்குமாபோல். அலைகளாகிய காரியங்
கடோன்றி யொடுங்கு மிடத்தை நோக்க வெஞ்சி யுள்ளவிடமநே
கமடங் கதிகமாக வந்தக்கடலி னிடத்துக் காண்கையா லத்தகைய
கடலினிடத்திற்றோன்றிய வலைக ளதிற்றானே யொடுங்குமென்பதற்
கிழுக்கென்னோ? இவ்வாறான வரும்பொருள் கிடப்பவேயன்றோ
காரணங் கிடக்கவாமே 'யென்று சைவத்தலைவருங் கூறினர்? கா
ரணமாகிய கடல் கிடக்க, அதிற் காரியமாகிய வலைக டோன்றி யொ
டுங்கி மீண்டுங்காரிப்படுதல் ஆம் என்று பொருள் விரவிக்கிடத்தலு
மொன்று. மேலிடத்திற் காட்டிய சித்தியார் வாக்கியத்தில் மரத்தி
லிருந்த விலையைப்போல் மாயையிற் பிரபஞ்ச முண்டாமென்றது
உலகாயதன் காட்டிய விபரீதவுபமானமேயன்றிச் சைவசித்தாந்தி
யார் கொண்டவுபமானமன்று. அவன் மதத்தை யநுவதித்துச் ச
மாதானங் கூறிய பகுதியே யதுவாம். அதனை [illegible] கொள்ளமா
ட்டாது. சைவர் கூறு முப[illegible]லெப்பெறுவிதமா[illegible] யாய்
யோசிக்கவேண்டியது. புறச்சமயிகள் புலப்படுத் தெல்லாம் [illegible]
னே மாரடித்துக்கொள்ள[illegible]ண்டுமோ? அதுப்ற[illegible] யன்றோ அவ
வழித்தோன்றுதாகவி ன[illegible]டாவென்னே?) என்று நஞ்சைவ [illegible]
ஷ்யகாரரும் பிரஸ்தா[illegible] கடலையுங் கரையையும், அலை

யையும் உவமித்துக் கடலிற் காற்றா லலையுண்டாகி யொடுங்குவதுபோல் மாயையிற் சிவனாலுலகமுண்டாகி யொடுங்குமென்று சைவர் கூறுவதை விரோதித்துச் சிலம்பி திட்டாந்தங்கூறி அபின்ன நிமித்தோபாதானங் கூறும் அம்மாயாவாதிமதத்தை யோசித்த லொன்றே மேலுண்மையை விளக்கும். உபாதானமும், நிமித்தமுஞ் சிலம்பியே யாகின்றது, காரியமாகிய நூலைத்தருதல் அவர் மதமாகலினது பேதிக்குமாறு யாம் கடாவுவே மன்றோ? சிலம்பியினது தேகம் ஜடமும், அதிற்போந்த தேகி சித்துமாகையால் நூல் காரியப்பட்டது தேகத்திலா? அல்லது தேகியினிடத்திலா? என்றபோது தேகத்திலென்றே வெளிப்பட்டு அவர் சாதிக்கவந்த அபின்ன நிமித்தோபாதானம் அடியோடே சாய்ந்துவிடுகிறதன்றோ? அதுபோல் சைவர் கூறு முபமானமும் மறுக்கப்பட்டாலன்றோ சைவகலந் தாழ்வுபெறும்? எதிரியினது மதாநுசாரமான வுபமானங்களை மறுக்கவேண்டியதே யன்றி வேற்று மதத்தினர் குத்வஸிதம் பேசி விளைக்கும் அவலதிட்டாந்தங்களை யொருபொருளாக மதித்து எந்த மதவாதியாயினும் பதிலுரைப்பது அவசியமன்று. அங்ஙனம் பதிலுரையாமையால் அவன் மதந் தாழுமாட்டாது. பிரமத்தில் மாயைக்கு உற்பத்தி கூறு மாயாவாதியையுஞ் சைவசித்தாந்தியைக் கேட்டபடியே வினவுதல் கூடுமன்றோ? எங்ஙனமெனின், மரத்தி னுதிர்ந்த விதை மரத்திலொடுங்காது அம்மரத்துக்குக் காரணமாகிய மண்ணிலொடுங்குதல்போல் பிரமத்திற் றோன்றியமாயை பிரமத்தி லொடுங்காமல் அந்தப் பிரமத்துக்குக் காரணமாகிய வேறெதி லொடுங்குகின்றது என்று கடாவுதலேயாம். இப்படி யொருவன் வினவுவது எமக்கபிமதமன்று. மரத்தையும், இலையையும் அவர்மதத்தி லுபமானங்களாகக் கொள்ளாமையால். அவர் கொண்டிருக்குமோ ருபமானத்தையே யன்றோ மறுத்தல்வேண்டும்? அப்படியே யன்றோ சைவரிடமுங் கொள்ளத்தக்கது? தன்மதத்துக்குப் பின் வரப்போகிற கதியை அம்மாயாவாதி நோக்காமல் எதிரி மதத்தை மாத்திர மெடுத்துப் பேசியது என்ன பேதமை? இப்படிப்பட்ட பல நியாயங்களால் மாயையிலேதானே பிரபஞ்ச முண்டாகி யொடுங்கி மீண்டுங் காரியப்பட்டுவருமென்னுஞ் சைவ முடிவு சாதிக்கப்பட்டது.

ஆயின், வித்திலொடுங்காது அதிக்கிரமிக்கும் மரத்தையும், அந்த வித்தையும் பிரபஞ்சத்துக்கும், மாயைக்குஞ் சைவநூல்களுவமை கூறியதென்னையெனின், வித்திலே நின்றுந் தோன்று மரம்

பூமி யாதாரமிலன்றித் தானே தோன்றமாட்டாதாற்போல மாயை யிலே நின்றுந் தோன்று முலகம் சிவனுதாரமி லன்றித் தோன்றமாட்டாதென்பதை விளக்குதற் பொருட்டேயன்றி, அதிலே நின்றுந் தோன்றிற்றோ வதிலேதானே யோர்பொரு ளொடுங்கு மென்பதை விளக்குதற் பொருட்டன்றாம். இவ்வுண்மை கண்டபின்னர் வீண் விவாதத்துக் கிடமுண்டாகாமையால், அவரது அறியாமையை யின்னுங் கொஞ்சமெடுத் திசைப்பாம். அவர் பாலிலுண்டான தயிர் அந்தப்பாலிலேதானே யொடுங்காமல் அந்தப் பாலுக்குக் காரணமாகிய பசுவினிடத்தே யொடுங்குமென்று கூறிக்கொண்டன ரன்றோ? தயிரைப் பசுவுக் குணவாக வூட்டுவது ஸம்பிரதாயமன்று. கதாசித்தாக வூட்டுவ துண்டாகையால்; பசுவுக்கு மாத்திரமே யன்றி அந்தப்பசுவின் றயிரை யெருமைக்கும், பன்றி முதலாகிய தாழ்ந்த மிருகங்களுக்கு முணவாக்குங்கா லது மீண்டும் பாலாகுமெனக்கூற வருமன்றோ? எருமைக்கும், பன்றிக்கு முணவான பசுவின்றயிர் எருமைப்பால், பன்றிப் பாலாகவே யன்றோ திரிந்துண்டாகும்? பசுவின்பாலாத லின்றாகையால், பிரபஞ்சம் பிரமமாயிடுமென்றது பெரும்பேதமையே! அந்தப் பசுவின்றயிர் மானிடர்க்கே யன்றோ முக்கியமாக வுணவாகின்றது? அவரிடத்திலது எப்படியாகின்றது? இந்தப் பிரஸங்கத்தால் தயிரானது பசுவினிடத்தொடுங்கி மீண்டும் பாலாகுமென்பதை மறந்தோ மாகையால், அவர் விபரீதமித் தோடேமாய்ந்தது.

மேல், பால் தயிராகப் பரிணமித்தது பிரமம் பிரபஞ்சமாகியதென்பதற்கு மாத்திரமே யுபமான மாகுமன்றி அந்தப்பிரபஞ்சம் மீண்டும் பிரமமாயிடு மென்பதற் குபமானமாக மாட்டாதெனின், அதற்குள்ள வுபமானந்தான் யாது? அங்ஙனங் காட்டியவிடத்துப் பூஜ்யமாகவே யாம் கொள்வேம். பிரமம் பிரபஞ்சமாக விரிந்ததென்பதற்குப் பால் தயிர்களைக்கொண்டதே தவறு. பாலுந் தயிரும் பரிணாம ஸம்பந்தம் பெற்றமையால் அப்படியே யுபமேயத்தையுங் கொள்வது அவசியம். அங்ஙனங்கொண்டு மறுத்ததைக் அவருமொப்புக்கொண்டே ஸமாதானஞ்சொல்லவந்து தடுமாறிப்போயின ராகையால், அது அஸங்கதமுற்றிய மென்பதே ஸித்தம். பொன்னுனது பூஷணமாகுங்கால் அந்தப்பூஷணம் மீண்டும் பொன்னாய் விடுவதுண்மை யாகையால், அதுவே பிரமத்தின் விகாரமாகிய பிரபஞ்சம் மீண்டும் பிரமமாய் விடுமென்பதற்கு யாமெடுத்துக்

கொண்ட வுபமானமெனின், அதுவுந் தவறுடைத்தாம். பொன்னும் அதன் விகாரமாகிய பூஷணமும் ஒரு தன்மை பெற்று விளங்கலால் அது கூடும். பூஷணத்திரிவில் பொன்னுருவங் கெடாமை வலித்தம். பிரபஞ்சத்திரிவில் பிரமசுபாவங் காணாமையாற் பிரபஞ்சம் பிரமமாகமாட்டாது. பால் தயிரானபோது பாலின்றன்மை தயிரிலில்லாமற் போனதுபோல் பிரமம் பிரபஞ்சமானபோது பிரமத்தன்மை பிரபஞ்சத்தி லில்லாமற்போயிற்று. பாலைக்காட்டிலும் தயிர் கௌரவங் குறையப் பெற்றது போலவே பிரமத்தை நோக்கப் பிரபஞ்சம் இழிவெய்தாநின்றது. உயர்ந்த பொருளும், இழிந்த பொருளுமாகிய பிரமம், பிரபஞ்சமென்பவைகட்குப் பொன்னையும், பூஷணத்தையு முவமைகொண்டு பூஷணம் மீண்டும் பொன்னாய் விடுமாபோல் பிரபஞ்சம் மீண்டும் பிரமமாய் விடுமென்று சாதிக்கத் தலைப்பட்டது அஸாமஞ்சஸமாய் முடிந்தது. இப்படியே அவர்காட்டு மொவ்வோருபமானமும் பேதிக்கப்பட்டு ஏகவாதத்தின்றலையி லிடிவிழுந்தழியுமாகையா லினியேனு மவர் மதமடங்கிக்கிடப்பாராக. இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—ஒன்றேயாகிய பிரமம் பல யோனிகளிற்புகுந்து பல பிரமங்களாயுடைந்த தென்னை? அது நின்மல முடையது என்று நீவிர் கூறுமாற்றம் தான் யோனிவாய்ப்பட்டழிதலால் பொய்ப்பட்டதென்னை?

மாயாவாதி,—சிவாகமங்கள் பதார்த்தங்கள் மூன்றே யென்றும், அவை பதிபசு பாசங்களே யென்றும் பிரதிபாதித்தற்குப் பொருளென்னை? பசுக்கள் பலவுளவென நீவிர் கூறுவதென்னை? பசுக்கள் பலவாயின், திரிபதார்த்தங்களென வரையறுத்த லெற்றுக்கு? பரமார்த்தத்தில் ஒற்றுமை நோக்கி ஒன்றென்றும், வியவகாரத்தில் பலவாய் விஜ்ரும்பித்துக் காணப்படுகின்றமையால் பலவென்றுங் கூறியதெனின், இதுவே பிரமவிசாரத்திலுங் கொள்ளாததென்னை? அக்கினி ஒன்றா? பல்வா? அக்கினி பற்பலவாக விஜ்ரும்பித்தக்கால் [illegible] பின்னத்வமேனும் பரிசுத்தமேனுங் கெடுமோ?

இந்த ஸமாதானத்தைப் பரியாலோசிக்குங்கால் பெருநகைப்பையே விளைக்கின்றது. பதியேகமும், பசுக்கள்

மலவும், பாசங்கள் மூன்றாமாகப் பிரதிபாதிக்கப்படுஞ் சைவசித்தாந்தத்தில் இம்மூவித விஜாதிகளையும் பதார்த்தத்திரயங்க ளென்று கூறுதலமையும். தமிழ்ப்பாஷையி னெழுத்துக்கள் உயிரெழுத்தும், மெய்யெழுத்துமென விரண்டுவகைப்படுமென்று கூறி, அவற்றுள் உயிரெழுத்து பன்னிரண்டும், மெய்யெழுத்து பதினெட்டுமாகும் என விரித்தோதுவதா லுண்டாகிய குற்றம்யாது? இப்படியேயன்றோ சைவசித்தாந்த விவரணத்தைக் கொள்வர் மேலோர்? திரிபதார்த்தங்களில் பசுவென்பது அந்த ஜாதியினது சமஷ்டி வாசகமாகக் கொள்ளப்பட்டதனால் வியஷ்டியாக விசாரிக்கையில் எண்ணிறந்தனவாக வெளிப்படும். இஃதொழிந்து பசுவென்பது ஏகமேயெனவும், அஃது விவகாரத்திற் பலவாகிப் பரமார்த்தத்தி லொன்றேயாக விருக்குமெனவுஞ் சைவநூல்கள் கூறாமையால், பிரமம் ஒன்றேயுள்ளதெனவும், விவகாரத்தில் அஃதொன்றே பலஜீவர்க்களாகுமெனவும், அவை மீண்டும் பரமார்த்தத்தி லொன்றேயாய்விடுமெனவுங்கூறு மாயாவாதத்தோடு எங்ஙனே யொற்றுமை பெறும்? இருவர் பிரசங்கமும் வேறுவேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றமையால், அநேகம் பொருள்களை மூன்றென்று சைவர் கூறியபடியே அநேகம் பொருள்களை ஒன்றென்று யாம் கூறினோமென்று அவர் தொடுத்த வீண்வழக்கு அபஜயத்தை யடைந்தது. ஒன்றாயுள்ளது ஏன் பலவாயுடைந்தது என்பதற்கு என்ன ஸமாதான முண்டாயிற்று? ஒருபொருடானே பலவாயுடைந்து காரியப்பட்டனவென்று சைவநூல்கள் பசுவைக் கூறியதுண்டா? பெத்தமுத்தி யிரண்டுகாலங்களிலும் பசுக்கள் பலவுள்ளனவெனவும், அவை திரிபதார்த்தங்களென்னுஞ் சமஷ்டிகளி லொன்றி லடங்குமெனவுஞ் சைவநூல்கள் கூறுகையால், விவகாரபரமார்த்தங்களை யேகமாகிய பிரமத்துக்குக்கூறி யிஷ்டம்போல் விவகரித்துவரு மாயாவாதி மதந்தானே மாட்சிபெறுமொழிக்க[illegible]. இனியொன்றாயுள்ள அக்னி பலவாக விஜ்ரும்பித்த[illegible], பரிசுத்தத்வமும் கெட்டனவாவென்[illegible] கொண்டதையுஞ் சற்றே யோசிப்பாம். ஒன்[illegible] பலவாக விருப்பித்தகென்கையி லவ்வொன்றினிடத்தும், பலவற்றினிட[illegible] சக்தி, தக்கசக்தி, பிரகாசசக்தி [illegible] தலின வொற்றுமை [illegible]
[illegible]

வ்வேகத்தினிடத்தும், பலவற்றினிடத்தும் பிரமசுபாவம் நீங்காதிரு க்கவேண்டும். பிரமத்தின் விகாரமென்று அவர் கூறும் உயிர்கள் சுகதுக்க ரூபிகளாய் வினைவயப் பட்டு மொத்துண்டு வருந்துகின்றவர்களும், உலகம் கேவல ஜடப்பொருளுமாகி விளங்கலால் பிரமத்தின் அபின்னத்வமும், பரிசுத்தத்வமும் அவற்றினிடத்துண்டோ வில்லையோ வென்பதை விவேகிகளே யோசிக்கவேண்டியது. இதனல் ஜாதஜீவர்கள் ஏகமாகிய பிரமமன்றெனவும், பிரமத்தைப்போலவே யவ்விரண்டு பொருள்களும் விஜாதித்வமெய்திய நித்தப்பொருள்களெனவுஞ் சாதிக்கப்பட்டது. இதுகாறும் விவகரித்து முடிவு செய்த பரிஷ்காரத்தால் சைவநிந்தையிற் றலைப்பட்டமிர்தஜண்டியொருவனால் வெளிப்பட்ட (பேதவாததிமிரபாநு) என்னும் ஆபாசத்திரட்டு அடியோடே மாய்ந்துவிட்டது. பேதவாதமென்பது மத்வமதமாகிய துவைதஸித்தாந்தமென லறியாது பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய முடிவுகளைக்கடந்து அத்வைதமென்னு ஞ் சிறப்புரிமை பூண்டு விளங்குஞ் சைவசித்தாந்தத்தையே பேதவாதமெனக் கொண்டெதிர்க்கவந்த பாஸ்கரனுக்குப் பலபலவென்று பல்லுடைந்து, குப்புறவீழ்ந்து குலைகுலைந்தோட நேரிட்ட புதுமையை நாடி அங்ஙனஞ் செய்தருளிய (ஆபாசஞானநிரோதம்) என்னு மிந்தச் சிவசூரியனையேயன்றோ வீரபத்திரமூர்த்தியெனத் துதித்து விரும்பாநிற்பர் மேலோர்? மேலே கூறப்பட்ட மூவிதவாதங்களும் புறப்புறச்சமயம் ஆறாகவும், புறச்சமயம் ஆறாகவும், அகப்புறச்சமயம் ஆறாகவும், அகச்சமயம் ஆறாகவும் விளங்கும். இவற்றுள் உலோகாயதம், சமணம், நால்வகைப் பௌத்தம் ஆகிய ஆறுசமயங்களும் புறப்புறச் சமயங்களாம். மாயாவாதம், பாஞ்சராத்திரம், ஸாங்கியம், மீமாம்ஸம், தார்க்கிகம், யோகம் ஆகிய ஆறுசமயங்களும் புறச்சமயங்களாம். சைவம் பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம், மஹாவிரதம் ஆகிய ஆறுசமயங்களும் அகப்புறச்சமயங்களாம். சிவாத்வைதம் [illegible] சிவைக்யவாதம், சிவஸங்கிராந்தவாதம், சிவஸ[illegible]வாதம், [illegible]வாதம், அவிகாரவாதம், பேதவாதம் ஆகிய ஆறுசமயங்களும் [illegible]கச்சமயங்களாம். இவ்விருபத்து நாலுசமயங்களுக்கும் அ[illegible]து சைவசித்தாந்தமென்னு முண்மை சிற்றம்பல[illegible]கள் [illegible]தருளிய தத்வப்பிரகாசம் என்னு நூலின்வழி யினிதுவிளங்கும். இங்ஙனமாக, புறப்புறச்சமயியாகிய லோகாயதன் முதலியோரும், புறச்சமயியாகிய மாயாவாதி முத

வினேருஞ் சைவசித்தாந்தத்தை யெதிர்ப்பது பேராச்சரியத்தை யேயன்றோ வுண்டுபண்ணுகின்றது? சரபத்துக்கு முன்னர் சிங்கமே தலைநீட்டாதென்றால் மூடி, கொசுகு முதலியன தலையெடுத்து வெளிப்படுவது எவ்வளவுபேதமை? தீபத்தை யணைக்கவிழுந்து அதில் விழுந்து சாகும் விட்டிற்பூச்சிகள் கதியே ஸம்பவிக்கையால் ஐயோபாவம்! என்று அவர்கள் விஷயத்தில் அநுதாபமே யுண்டாகின்றது. ஆனாலுஞ் சிறிய பாம்பாயினும் பெரியதடிகொண்டடிக்கவேண்டுமென்னும் பழமொழிப்படியே ஷை மதஸ்தர்களி லிப்போது கொஞ்சந் தலைவிரித்தாடுங் கலிநண்பர்களாகிய உலகாயதன், மாயாவாதி முதலினோரைப் போதுமானவரையில் விசாரித்துக் கொண்டோம். இவருள்ளும் ஏகாத்மவாதியாகிய மாயாவாதியை அதிகமாக விசாரித்துக்கொண்டோம். உலகாயதன் இளையவனும், மாயாவாதி மூத்தவனுமாகையால். இம்மாயாவாதியினது மதங் கிளைத்து வேர்விட்டதென்ன வெளிப்பட்ட உத்தமவாதம், சர்வமதசித்தாந்த விளக்கவினாவிடை, திருக்குதிரிசியவிவேகம் என்னும் ஆபாசத் திரட்டுகளை முறையே உத்தமவாத நாலவாதாலம், சித்தாந்த பூஷணம், திருக்குதிரிசிய விவேக கண்டனம் என்னுங் கோடரிகளால் வெட்டி யெறிந்துவிட்டோம்.

இன்னு மிம்மாயாவாதம் பலவிதமான பரியாசத்துக் குள்ளாகியவக்கனுண்டழியும்! அழியும்!! எங்ஙனமெனின்? அம்பட்டனொருவன் எலுமிச்சங்காயளவு பொன்னை யெப்படியோ சம்பாதித்து அதைத் தன்னுடைய அடப்பத்தில் வைத்திருந்தான். ஓர் நாள் இவன் அரசனுக்கு க்ஷவரஞ் செய்துகொண்டிருக்கையில் அரசன் அவனைப்பார்த்து உன்க்ஷேமம் எப்படி யிருக்கிறதென்று வினவினன். அதற்கு எவ்வளவு ஏழையாயிருந்தாலும் எலுமிச்சங்காயளவு பொன்னுக்குத் தரித்திரமா? என்று அம்பட்டன் பதில் கூறினன். அதைக்கேட்ட வரசன் புன்சிரிப்படைந்து மறுநாள் அவ்வன் க்ஷவரஞ்செய்ய வருகையில் அவனை [illegible] மேலேயிட்டு வெளியே போகச்செய்து அவன் [illegible] இல் அதில் எலுமிச்சங்காயளவு பொன்னி [illegible] அதைக் [illegible] த்துக்கொண்டனன். பின்புவந்த அம்பட்டன் [illegible] பெற்றுக்கொண்டு அ[illegible] த்தையு மெடுத்துக்கொண்டுபோய் மறுநாள் க்ஷவரத்துக்கு வந்தனன் அப்போதும் க்ஷேமவிசாரஞ் செய்ததனை. அதற்குஉலகமுழுதுங் கஞ்சிக்கு அலைகிறதென்றனன். இந்தப்பிரகாரம் அரசன் அம்பட்டனு[illegible]

டைய செல்வத்தின் பெருமை யினைத்தென்று அறிந்து வியந்தனன். இதுநிற்க, வேறொரு விசித்திரமு முண்டு. பூனையானது ஏதாவதொன்றைத் திருடியுண்கையில் அதற்குக் கண்ணைமூடிக்கொள்வது சுபாவம். அங்ஙன மூடிக்கொள்ளுகையில் தன் கண்ணுக்கு ஒருவரும் புலப்படாமையால் இவ்விடத்தி லாருமில்லையென்று பயமற்றுத் திருடியுண்ணும். அங்குள்ளவர்கள் பார்த்து உதையாமற்போகார்களாகையால், அப்போது திடீரென்று விழித்து இதுதானோ வுலகம் என்று மருண்டு ஓடும். இவ்விரண்டு விருத்தாந்தங்களாலும் அறியாமை மேலிட்ட ஜந்மங்களுடைய தன்மையே வெளிப்பட்டது. அம்பட்டனுக்குத் தன்னனுபவமே யுலகமெங்குமிருப்பதாகவுண்டாகிய வுணர்ச்சியும், பூனையானது தனக்கு யாருந்தோன்றாமையால் யாருமே கிடையாதென்றுண்டாகிய வுணர்ச்சியும் நம்மாயாவாதப் பெருஞ்செல்வர்களுக்கே யன்றோ பொருந்து முபமானங்களாயின? மாயாவாதியாவான உலகம் தானினைத்தபோதே யுண்டென்றும், நினையாத போது இல்லையென்றுங் கூறுகின்றமையாலும், சுழுத்தியில்பிரபஞ்சம் உண்டானாற்காட்டென்றுகேட்கின்றமையாலும் அவன்கூறு ஞானத்தை அம்பட்ட ஞானமென்றும், மார்ஜால ஞானமென்றும் விவேகிகள் கூறுவர். தன்னிடம்பொன்னிருந்த போது உலகமெங்கும்பொன்னிருந்ததெனவும், தான் கண்ணைமூடிக்கொண்ட மாத்திரத்தானே யாருமில்லையென்றும் அம்பட்டனும், பூனையுங்கொண்டபடியே யன்றோ? தானினைத்தபோதே யுலகமுண்டென்றும், தான் கண்ணைமூடித்தூங்குவது கொண்டே யுலகங்கிடையாதென்றும் அம்மாயாவாதி மயங்கிக்கூறுகின்றான்! இத்தகைய மாயாவாதியின் சிறப்பை யின்னுங் கொஞ்சங் கூறுவாம். ஓரிடையன் மாடுமேய்த்துக்கொண்டிருந்து ஓர் ஏரிக்கரையின்கீழ் நல்ல நித்திரைசெய்து தூங்கி விட்டனன். அப்போது பெருமழை யுண்டாகி வெள்ளம் பெருகி யோடிற்று. அந்த வெள்ளத்தில அவ்விடையன் றலைமயிர் நனைந்து அ[illegible] சேர்ந்த [illegible] இடியும், மின்னலும், காற்றும் அதிக[illegible] வனது பெருந்தூக்கஞ் சட[illegible] அவ்[illegible] தூங்குகையில் அந்தவழியே போனான். அம்பட[illegible] அவன் அ[illegible] தன்மையைக் [illegible] அருகிலே [illegible] அவ்[illegible] செத்த [illegible] வென்றும், தூக்கத்தின் பெருமை அது வென்றும் அம்பட்டன் தெளிந்து அவ்விடையன் றலைமயிரை [illegible]

து காடுபற்றி யிருந்த ரோமராசிகளைக் களைந்து அவனைப் புரட்டிப் புரட்டிச்சர்வாங்கமும் க்ஷவரஞ்செய்துவிட்டுப் போயினன். அன்று கழித்துமறுநாள் விழித்துக்கொண்ட அவ்விடையன் விழித்தவுடன் தன்னுடைய முகத்திற் கையையிட்டுத் தாடியைப் புருவப்போனான். தாடியில்லை. மீசையைப்பார்த்தான். அதுவு மில்லை. குடுமியைப் பார்த்தான். அதுவுமில்லை. இப்படி யெங்குங்காணாமையால் அவன் தன்னிற் சந்தேகங்கொண்டு அழத்தொடங்கினான். (நான்றான் நானல்லவோ? இது—நல்லூரிலே யேரிக்கரையல்லவோ? கோனன்றான் கோனனல்லவோ?என்னைக்—கொண்டழித்து வேறு யாரைக்கொண்டணைந்தாரோ? நான்றான் நானில்லவோ?) என்று புலம்பிய விசேடத்தைக் கொஞ்சம் விரித்துரைப்பாம். அவ்விடையன் தாடி குடுமி முதலிய வடையாளங்களில்லாமற்போகவே தன்னிடத்திற் றனக்குச் சந்தேகமுண்டாயிற்று. நானாயிருந்தால் எனக்குக் குடுமி, தாடி முதலியன விருக்கவேண்டுமே! அவையில்லாமையால் நான் - நானல்லவோ விருக்கிறது. நான் படுத்திருந்தவிடம் நல்லூர் எரிக்கரையாச்சுதே! அது தண்ணீரில்லாத எரியன்றோ? இதோ விருக்கிற ஏரி தண்ணீர் கொண்டிருக்கிறதாகையால் அந்த ஏரிதானோ இது வேறு ஏரிதானோ? தாடி முதலியவற்றோடு கூடிய என்பேர் கோனனாச்சுதே! அவையில்லாமல் இப்போது காணப்படுகின்றவன் கோனன்றானோ அல்லவோ? தெரியவில்லை. தாடி முதலியவற்றோடு தண்ணீரில்லாத ஏரிக்கரையின்கீழ்ப் படுத்துக்கொண்டிருந்த கோனன் என்னும் பெயரையுடைய என்னைக்கொண்டழித்து அவ்வடையாளங்களில்லாத வேறு யாரையோ தண்ணீர் நிரம்பிய விந்த ஏரியின்கீழ் யாரோ கொண்டுவந்து போட்டுவிட்டார்கள் என்று தேம்பித்தேம்பி யழுதுகொண்டிருந்தான் என்னும் விசேடம் நம்மையாவாத் ஞானிகளுக்கே யன்றோ பொருந்தும்? பிரமம் தன்னை மறந்துவிட்டதனாலன்றோ தான் பிரமந்தானோ அல்லவோ என்று சந்தேகமுண்டாகி, ச் சிவத்தன்மை யெய்தி முன்னிருந்த [illegible]யாகிய பிரமத்தை பெயர்ந்து அழுதுகொண்டிருக்கின்றது? இப்ப[illegible] பிரமத்துக்கு அவதிகளுநன்[illegible]குமா[illegible] [illegible]றி அ[illegible]திக் கரையேறித் தங்களை [illegible]ளைப் [illegible]கொட[illegible]களில் அங்ஙனம் [illegible] [illegible]வாரு[illegible] [illegible] விட்டு[illegible]னிற [illegible]யாமையால் அபயமெ [illegible] ஆ[illegible] ட்டதெல் [illegible] ஒருவரைபொருவர் [illegible]டிக்கொண்டரு[illegible]

கதையுமேயன்றோ நமது பிரமத்தின் குஞ்சுகளாகிய மாயாவாதிகள் பெருமையையினிது விளக்கும்? மூடர் பதின்மருடைய கதையாகிய விருத்தவுபமானத்தைப் பிரமத்தினிடத்தேற்றி அப்பெருந்தகையாளரே கூறிக்கொள்ளுவ துண்டாகையால் யாம் விசேடித்துரைப்பது அவசியமன்று. இவரை மார்ஜாலஞானிகளென்பது வேறுவிதத்தாலுஞ் சாதிக்கப்படும். "கேசித்த்வைத மாச்ரித்ய பிடாலப்ரதி மாநரா; ருத்ரேண ஸாம்ய மந்யேஷாம் வதந்தி ப்ரவிமோஹிதா:" என்னுஞ் சூதஸம்ஹிதா வசனத்தால் சிலபேர் அத்வைதமென்னும் அபேதவாதத்தை யநுசரித்து மார்ஜாலச் சிரேஷ்டர்களாகி ஸ்ரீருத்ரமூர்த்தியோடு ஏனையதேவர்க்களையுஞ் சமானமாகப் பிரமித்துப் பிதற்றுகின்றார்கள் என்று வெளிப்பட்டது. இதனால் அத்வைதமென்னும் ஏகாத்மவாதத்தை யநுசரிப்பது கொண்டே ஸ்ரீ சிவபெருமானொடு ஹீனதெய்வங்களையெல்லாம் சமானங்கூறத்தக்க வவிஞானமுண்டாகிறதெனவும்; அந்த ஞானசித்திபரதந்த்ரமே அவர்கள் பிரமித்துப் பிதற்றுகின்றார்களெனவும் ஏற்படுகின்றது. இவ்வத்துவிதம் இன்மைப்பொருளைக் கொண்டதென்றறிக. சைவபரமாக வதை விவகரிக்குங்கால் அன்மைப்பொருள் விரவிநிற்கும். அதுசைவம்பழுத்து விளங்கு மவ்வத்துவிதத்தை யநுசரிப்போர் மார்ஜாலசிரேஷ்டாளென்றதென்னையெனின், பூனையானது சுவர்முதலிய விடங்களிலிருந்து தாவும்போது இந்தப்புறந்தாவுமோ, அந்தப்புறந்தாவுமோ என்று சந்தேகத்தை யுண்டுபண்ணுவதுபோலவே அவர் பரதத்வநிர்ணயம் பண்ணுகையில் அது சிவனோ, விஷ்ணுவோ என்று மபக்கத்திலே தானே முடியும். பூனைக்கு எந்தப்புறங் குதித்தாலும் சகசமாவதுபோல் இவர்களுக்கும் எந்தத் தெய்வத்தைச் சொன்னாலும் சகசமாய் முடிந்திடுவதால். இவர்கள் சைவருமன்று, வைஷ்ணவருமன்று. உபயபிரஷ்டர்களென்பதே தீர்மானம். சிவநிந்தையைச் சகிக்காமல் வியவஸ்தைப்படுத்திப் போலியத்துவிதமாகிய ஏகாத்மவாதத்தைக் கண்டிக்கும் சூதஸம்ஹிதையை மாயாவாதநூலென்று மருண்டு கையாண்டுவரும் அவ்வவிவேகிகள் வினையிருந்தவாறு ஆச்சரியம்! ஆச்சரியம்!! அத்துவிதம் என்னுஞ்சொல்லானது அவருக்கெப்படி விரிமையெனக்கொண்டு குழப்பிவருகின்றார்களோ அப்படியே சூதஸம்ஹிதையையுந் தமதாக அவர் குழப்பிப் பெருங்கூச்சலிட்டு வருகின்றனர். இனமேல் விஷயத்தில் யாமெடுத்துக்கொண்ட பிரபலக்ஷத்துக்காகின்றமையால் விட்டிட்டு அபரதியடைக்

சர்வாபஹாரமாவதுஞ் சித்தியாமற்போகும். அதனால், கிருஷ்ணனோடு சண்டையிடத்தொடங்கிய சுவாமியானவர் அபஜயமடைந்தவராக நாடகம்புரிந்தனர். அப்போது, சிவனால் வெற்றியுண்டாகாமற் போனகுறையை நிவிர்த்திபண்ணிக்கொள்ளும் பொருட்டுப் பாணன்றானே கிருஷ்ணனையெதிர்த்தனன். எதிர்த்து இரண்டுபேருஞ் சண்டைசெய்கையில் பாணனுடைய புஜங்களறுபட்டுக் கொண்டேவந்து இன்னுமிரண்டு புஜங்கள் சேஷித்திருக்குமவ்வவசரத்தில் சிவபெருமான் அம்மட்டிலே நிற்கவெனக் கிருஷ்ணனுக்குக் குறிப்பித்தனர். அச்சிவாக்ஞையால் பாணனுடைய இரண்டுகரங்களும் கிருஷ்ணனால் துணிக்கப்படாமல் நிறுத்தப்பட்டன. இந்தவுண்மை விசாரத்தால் சிவபெருமான் ஓடினது நடனமாத்திரமெனவும், கிருஷ்ணன்பாணனை வென்றது சிவனுடைய இச்சைபிசைந்தபடியெனவும் வெளிப்பட்டது.

இவ்வுண்மையறியாமல் கிருஷ்ணனுக்குச் சிவபெருமான் பயந்தேயோடினரென்னும் பாமரரறியாமையைச் சற்றேபர்யாலோசிப்பாம். கிருஷ்ணன் விஷ்ணுவினுடைய கறுப்புமயிரொன்றி னவதாரமென்பது பாரதத்தால்விளங்கும். பலராமன் அவனுடைய வெள்ளைமயிரொன்றானபடி. இந்தமயிரவதாரமூர்த்திகள் சிவனைவென்றகதை குருவுக்குக்குதிரைமுட்டை வாங்கிக்கொடுத்த வதிகாரிக்கேயன்றியேனையோர்க்குப் பயன்படாதெனவறிக. அந்தரோமமூர்த்திகளில் நீலரோமமூர்த்தியாகிய கிருஷ்ணன் ஜராசந்தன்பால் விரோதப்பட்டு அவனால் பலமுறையுத்தத்திலபஜயத்தையடைந்து முதுகுகாட்டியோடிக் கடலிலொளித்துக்கொண்ட கதையைப் பாரதபாகவதாதிகள் கூறுமுண்மையைப் பரிகரித்துக்கொள்ள வகையறியாமலென்றோவவமதிக்கின்றது ஆச்சரியம்! ஆச்சரியம்!! இதுவேயன்றி மதுகயிடவர்கதைதனை யினிக்கிலுமவர் மானங்குலையுமே! எங்ஙனமெனின், மதுகயிடவரென்னு மிரண்டசுரர் விஷ்ணுவினுடைய காதுக்குறும்பியினின்றுண்டாகி அவரையே யெதிர்த்துப் போராடுகையில் அவ்வசுரர்பால் நல்லபுடைச்சலுண்டு வருந்தினர். அப்போது [illegible] செய்பச்சக்தியற்றவராயி [illegible] ண்டாம விட்டு [illegible] மெனறனர். அதற்கவர்கள் [illegible] வகையற்றவனே [illegible] ன்றுபிரிந்து [illegible],

[illegible]ங்கள் தருகிறோமென்றனர். இதுதான் சமயமென்று நீங்களிருவரும் என்னால் சாகவரந்தரவேண்டுமென் றிரந்தனர். அப்படியே யவ்வசுரர் கொடுத்தவரத்தாலவரைச் சூழ்ச்சியால்கொன்று விட்டவராகிய மூலவிஷ்ணுவின்மகிமையே சாலநன்கக்கவிடந்தருமெனின், அவருடைய சாட்சாத்தவதாரமுமன்றி அவருடைய ரோமாவதாரமூர்த்திக்குச் சிவபெருமான் பயந்தோடினரென்பது எங்ஙனந் தலையெடுக்கும்? பாரதயுத்தத்தில், சரீரமெல்லாம் ரக்தமயமாகப் பாணங்களால் துளைக்கப்பட்டுவருந்தியபோது ஆயுதத்தைக்கையாற் றீண்டமாட்டேனென்று கொண்டிருந்த சபதத்தையுங்கடந்து சக்கரத்தைத்தாங்கிச் சண்டையின்மொத்துண்டும், பௌண்டரீக வாசுதேவனென்பவனால் அவமானத்தையடைந்து முழன்றவோர் கருமயிர்ச்சேய்க்குக் கைலாசநாதன் றோற்றோடினனென்னுங் கபோதிக்கதையை யெந்தவைதிகரோ வங்கீகரிப்பவர்? இன்னபலவாபாசங்களைப் பிறப்பினாலும், தொழிலாலும் பெற்றுழன்றொழிந்தவோர் ஜந்துவாகிய கிருஷ்ணனுக்குச் சர்வலோகசரண்யராகிய சிவபெருமான் பயந்தோடினரென்பது அசப்பமென்பதை யின்னும் பரியாலோசிப்பாம். பாகவதம், தசமஸ்கந்தத்தில் "ஸஹஸ்ரஸ்துத்வயாதத்தம் பரம்பாராயம்பவேத், த்ரைலோக்ய ப்ரதியோத்தாரம் நலேபேத்வத்ருதேஸமம், கண்டுத்யநிக்ருஷதைர்தோர்பி ருச்வஸத்திக்கஜாநகம், அப்யயாச்சூர்ணயந் நத்ரீந் பீதாஸ்தேவிப்ரதுத்ருவு:, தச்ருத்வாபகவாங்க்ருத்த:, கேதுஸ்தேபஜ்யதேயதா, த்வத்தோத்பங்கோபவேந்மூடஸ் ஸம்யுகேமத்ஸமேநதே, இத்யுக்த: குபிர்வ்ற நுஷ்ட: ஸ்வக்ருஹம் ப்ராவிசந்ருப" என்றற்றொடக்கத்து வசனங்களால் பாணன் சிவபெருமானைப்பார்த்து ஆயிரங்கைக ளெனக்குக்கொடுத்தது மிகவும் பாரமாகவே யிருக்கின்றது, உம்மையல்லாம லிந்தமூன்றுலோகத்திலும் என்னுடன் யுத்தஞ்செய்கிறவனை நானடையவில்லை, திக்கஜங்களுடன் முட்டினலவைகள் ஓடிப்போகின்றன, பர்வதங்களை முட்டினலவைகள் பொடிந்துபோகின்றன; [illegible]த்திலே தானே வந்தேன் என்று சொன்னபோது அந்த[illegible] கோபித்தவராகி, எ மூடனே! எனக்குச் சமானமாகிய யொருவ[illegible] *டக்கயம் அறுபடப்போகின்றது. [illegible] உன்னுடைய[illegible]க்களுக்குப் [illegible] அத[illegible] [illegible] [illegible]பட்டிருக்கி

* [illegible]=துவசம், [illegible]

ன்றது. இந்தவர்த்தங்களை யூகிக்குமிடத்துச் சிவனையன்றியில்வேறு ஒருபொருளையும் பாணன்மதிக்க வில்லையெனவும், விஷ்ணு முதலியவர்களு மவனுற்றனுக்கஞ்சியே பதுங்கியிருந்தாரெனவும், தன்னுயிரங்கைகளையும் பயன்படுத்தத்தக்கவிடங் காணமையா லவைகளை வெறுமனேயவன் றுங்கியிருந்தது அவனுக்குப் பாரமாகவே காணப்பட்டதெனவும் பெறப்பட்டது. அன்றியும், எனக்குச் சமானமான வொருவனுலுனது டக்கயம் அறுபடுமெனவும், அப்போதுஉனது புஜங்களுக்குப் பங்கம்வருமெனவும் அவனை நோக்கிப் பகவான் சொன்னாரென்றதனால், இனிப்பவிஷ்யத்தில் கிருஷ்ணனுலவனது டக்கயமறுபடுதலும், அவனது புஜசர்வாபஹார முண்டாதலும் பெருமானது திருவுள்ளத்திஷ்சையெனவும், அந்தப்படிக்குக் கிருஷ்ணனைக்கொண்டு முடிக்கப்போகிற தம்மபிப்பிராயத்தைக் குறிப்பானே வெளிப்படுத்தினாரெனவும், அவர் திருவுள்ள மிசையாதபோது அந்தக் கிருஷ்ணனுலொன்றும் பாணனை யசைக்கமுடியாதெனவும் வெளிப்பட்டது. கிருஷ்ணனைக்கொண்டே பாணனுடைய புஜசர்வபஞ்சனஞ்செய்யத் திருவுள்ளத் தெண்ணியுரைத்தவராகிய சுவாமி கிருஷ்ணனுக்குப் பயந்தோடினாரென்றல் யாண்டிசையும்?.

இன்னும், பாணனைப்பார்த்து என்னோடொத்த வொருவனுனது டக்கயம் அறுபடப்போகிறது என்று சொன்ன சுவாமிவார்த்தையின் மகிழ்ந்து அவன் தன்னரண்மனைபோய்ச் சேர்ந்தான் என்று வந்தமையால் பாரமாயிருந்த கைகளொழிந்துபோவது அவனுடைய விஷ்டாபத்தியென் றேற்படுகிறது. அதுபற்றியே கிருஷ்ணனைக்கொண்டு அவைகளைத் துணிப்பித்தனரெனவறிக. இதனுல் பாணனுக்குபகாரஞ் செய்தலே சித்தித்தமையின், சிவபக்தனுகிய பாணனைக் கிருஷ்ணன் பரிபவப்படுத்தினானென்பது அசங்கதமென்க. இதனை யுபாத்தியாயரைக்கொண் [illegible] தண்டிப்பித்தும், மருத்துவனைக்கொண் [illegible] யறுப்பித்து முபகரிக் [illegible] கற்றுணர்ந்தமேலோர் [illegible] சிவனடியானுகவே [illegible] லவனுக்குப் [illegible]

* இன்னும், [illegible] ப் பர்வமேறு [illegible]

மாவது கண்ணன்பால் சாருமேயெனின், அவன் சிவபெருமான
து பரிக்கிரஹசக்திகோடிகளிலொன்றாய் முடிவானெனினவனாற்றல்
தெய்வத்துக்கே வெளிச்சமாம். புழுக்களும் பஞ்சகிருத்யஞ் செய்
யுமாற்றல் சிவாக்ஞையாற் பெற்றிருக்கு முண்மையால். அந்தக்கிரு
ஷ்ணனையே யவனிற் றாழ்ந்த பலரைக்கொண்டு பரிபவமுண்டாகச்
செய்தபடி மேல் விவகரித்துக் காட்டப்பட்டிருக்கு முண்மையால்.
இது நிற்க, பாணன் சிவதீக்ஷாவானாய்ச் சைவசின்னந்தாங்கி நின்ற
கண்ணனால் தனகுப்பாரமாயிருந்த தோள்களறுக்கப்பட்டமைகொ
ண் டங்ஙனமுபகரித்தபடியானு மதிகசந்துஷ்டனா யவனை வாழ்த்து
தலைசெய்வன். பூர்வமே சிவபெருமானா லெடுத்தோதப் பெற்ற
பெருமிதமுங்கண் டுபசரிக்கக் கடமைப்பட்டவனாதலால். இவ்வுண்
மையை யூன்றி விசாரியாத மந்தமதிகளே சிவநிந்தையிற் றலைப்பட்
டழிவர்! அழிவர்!! ஆயின், கிருஷ்ணனையெடுத்தோதுங்கால் எ
ன்னோடு சமானமான வொருவனாலுனது டக்கைய மறுபடுமென்று
பாணனிடஞ் சிவன் சொன்னமையால் கிருஷ்ணனுக்குச் சிவனோடு
சாமியமுண்டாகிறதே யெனின், அது ஔபசாரிகமென்க. சாமா
னியனொருத்தன் கௌரவஸ்தனொருவனைத் தன்னுடனோரிடத்துக்
குவந்து தனக்காக வேண்டிய காரியங்களை முடித்துத் தருகவெனக்
கேட்குங்கா லவனுடன்போவது தனது கௌரவஹானியென்பதை
யுட்கொண்டு அவனுக்கிதஞ்சொல்லித் தனக்குப் பதிலாக வேறொ
ருவனை யனுப்பி யிவனென்னில் சமானமானவன், இவன் வருவது
நான் வருவதுபோலவேகொள், என்னிலுமிவனாலுனக்கு அதிககாரி
ய சாதகங்களுண்டாமென்று போக்குக்காட்டி யனுபவமாய் நடந்
துவரும் விவகாரத்தாலுங் கண்டறிந்தடங்குக. இதன்முடிவு அவ
ன்காரிய சாதகமாக வேண்டியதொன்றே யாதலால் மேல்வியவஸ்
தை சர்வசம்பிரதிபன்னமாதல்தெளிந்திடுக.

இப்படி [illegible] கிருஷ்ணனுக்கு நேருமபகர்ஷ நிவிர்த்
தியர்த்தம் கிருஷ்ண[illegible]னோடு சமானமானவனென்று சிவன்
சொன்ன தபசாரமன்று, உண்மையேயென[illegible]வாமெனின்,
அப்போதும் சமானனாகிய கிருஷ்ணனுக்கும் [illegible]கோடினு
றென்றல்பிழையாம். அன்றியும் இரண்டிருமான[illegible]ருக்களுண்
டாகிய பிரம்மாவும் சமானதிக ரஹிதமாயுள்ள[illegible]ஞ்சுருதியும்
[illegible]டப்பட்டுப்போம். ஆயின், பாணனிடம் தன்[illegible]துறைத்திச்
சொல்லக்கூட்டமையால் சிவன் தன்னிலு மதிக[illegible]ணனைச்ச

ஷணனாகக் கூறினாரென்பாமெனின், அப்போது பாணனைச் சிவன்
வெல்ல வகையற்றுச் சொன்னாரென்பது பெறும். தானே வெல்லக்
கூடுமாயின் வேறொருவனைச் சுட்டவேண்டிய வாவசிகமின்மையால்.
இல்லை, பாணனைச் சிவன்வெல்லுவது கூடுமெனின், தானேகௌரவ
மாய் முடிப்பதைவிட்டுப் பின்னர்ப்பாணனுக்காகப் பரிந்துபோய்க்
கண்ணனிடம் பரிபவப்பட்டலைய வழிதேடியதென்னை? பின்னே த
னக்குப் பரிபவமுண்டாமென்றுதெரியாமையா லப்படிச் சொன்னா
ரெனின், கண்ணனால் பாணனுக்குமாத்திரங் கரங்கள்சேதிக்கப்படு
மென்றவர் முன்னரே தெரிந்துகொண்டதெப்படி? இப்படி விசா
ரிக்கவந்த வுண்மையால், சர்வஞ்ஞராயுள்ள சிவபெருமான் பாண
னது புஜகர்வாபஹாரம் கண்ணனாலுண்டாமென்றறிந்து அவ்விரு
வர் வினைக்கேற்பவவரை யொருங்குகூட்டி யொருவனைத் தோற்கச்
செய்தும், மற்றொருவனைக் கெலிக்கச்செய்துந் தமதருள்விலாசத்
தை நடத்தினரென்றே மேலோர்துணிந்துரைப்பர். இல்லை, பாண
னையே கெலிக்கச் சிவனசத்தனாமெனின், அவனுக்குவந்த வாக்கப்
பாடெல்லாஞ் சிவனே கொடுத்தாரென்பது சாஸ்திரப் பிரசித்தியா
கையாலது செல்லாது! செல்லாது!! இன்னும்பாணன் சிவன்பக்
கல் சார்ந்து இந்தமூன்றுலோகத்திலும் என்னுடன்யுத்தஞ் செய்
கிறவனை நானடைய வில்லையாகையா லுன்னிடம் வந்தேனென்பது
ம் பொய்யாய்முடியும். என்னெனின், மூன்றுலோகத்திலு மெனக்
குச்சமானமான பேரில்லை யென்றதனால் விஷ்ணுவுங் கழிப்புக் கண
க்கிலேதானே யொதுக்கப்பட்டார். அவரிறுதியாகக் கழிந்துப்போ
ட்டுத் தன்னின்மேலான வாற்றலுடைமை சிவனிடத்திலே தானே
கண்டு வந்திரந்து கொண்டானாகையா லவனைச் சிவன் வெல்லவல்
லாரல்லரென்பது புல்லர் சொல்லாய்முடிந்தது. அவன் வாக்கால் சி
வனையொழிய வவனுக்குத் திரிலோகத்திலுஞ் சமானராவது, அதிக
ராவது இல்லையென்று பெறப்பட்டதோடு, [illegible] தானவ
னை வெல்லக்கூடாத வபிப்பிராயம் [illegible]பின், சிவனிறுதி
யாக யாவரும் [illegible] யாவரினு
மேலான[illegible]யும், அதனினின்னும், அவன் அதிக
சிலனை [illegible]ன்றதுங் கட்டுக்கதை யாய்ப்போம்.

இங்ஙனமிருக்க, "பாஞ்சேவி பாதிபத்யார்த்தம் மைத்ராசாஹ த்ரி
லோசனம், தேவபாஹுஸஹஸ்ரேண [illegible]
சின்மனை[illegible] பாஹுஸோம் ஸாபல்யஜனகோத்தம், [illegible]

த்தம் பாராயமமகிம்புஜை:, மயூரத்வஜபங்கஸ்தே யதாபாணபவிஷ்ய தி, ஹதாசஜகதாநந்தம் ப்ராப்ஸ்ய ஸேத்வம்ததாரணம்" என்னும் பாகவதவசனத்தால் பாணனுனவன் பரமேசுவரனை யடைந்து மிகுந்த பிரேமையோடு அவரைப்பார்த்து ஹேஸ்வாமின்! இந்த ஆயிரங் கைகளால் நான் துக்கித்துக் கொண்டிருக்கின்றேன், இந்தக் கைகளுக்குச் சாபல்பத்தை யுண்டுபண்ணுவா ரொருவரையுங்காணேன், யுத்தமில்லாமல் இந்தப்பாகுக்களால் நானடையும் பிரயோஜனம்யாது? என்றுகேட்டதற்குப் பகவானுகிய பரமேசுவரர் உனது மயில் கொடி யெப்போது அறுந்து விழுமோ, அப்போது ஜகத்துக்கு ஆநந்தமாகிய யுத்தமுண்டாகுமென்று சொல்லியருளினரென்று வெளிப்பட்டது. இந்தவுண்மையால் பாணன்தனது கைகளுக்குச் சாபல்யத்தை யுண்டுபண்ணுகிற யுத்தமுண்டாகாமையால் துக்கிதனுயிருந்தானெனவும், யுத்தத்தையே விரும்பிக்கேட்டா னெனவும், அப்போது பகவான்யுத்தமுண்டாகப் போகிறகாலத்தைக் குறிப்பித்தருளினு ரெனவும் வெளிப்பட்டது. அவனேடு தாமே சண்டை செய்வதி லவனுக்கின்பஞ் செனியாமையுமுணர்ந்தே யவனேடெதிர்த்த வேறெருத்தனைக் காட்டியதென்க. எங்ஙனமெனின், பூனையோடு பூனையும், புலியோடு புலியும், ஆனையோடு ஆனையும், சிங்கத்தோடு சிங்கமும் போர்புரிதலா லவ்வவற்றின்றியிர் விட்டுப்போம். பூனையுஞ்சிங்கமும் போர்புரியத்தொடங்கி னெவ்வாறு முடியும்? சிங்கத்தின் வலிவத்தனையும் பூனையின்மேற்ருக்கலா லதிங்குபமான வளவால் நசுக்குண்டுபோ மாகையாலது சண்டையாகாதெனவறிக. இந்தநிதரிசனப் பிரகாசத்தால் பாணனைக்கிருஷ்ணனேடு சண்டைக்கு [illegible] பூர்த்திய பரமன்செயல் பண்புடைத்தாதல் வெளிப்பட்டது.

இன்னும் [illegible] த்யம்ராநேஷு பாணஸ்யபகவாங்சிவ:, [illegible] ராஷதா, அயம்மமேஷ்டோதயிதோ [illegible] தேஷ், [illegible] ஸம் தத்பவத:ப்ர [illegible] என்னும் வசனங்களால் பாணனுடைய [illegible] தமைப்பெற்றயவரும் [illegible] பார்த்து இந்தப்பட [illegible] இஷ்டனும் [illegible] ல் வேண்டியவனுமாகையால் இவனுக்கு எம் அபய [illegible] றின்றேம், இவனவதுஞ் செய்க [illegible]

தை நீ பெட்படியடைய வேண்டுமோ அதைத்தேடிக்கொள்வா யென்றருளிச் செய்தவுண்மை வெளிப்பட்டது. இதைவியவஸ்தை பண்ணுமிடத்தில், பாணனுக்குச் சிவபெருமானே லபயங்கொடுக்கப்பட்டதனால் அவன் ஒருவராலும் வதஞ்செய்யப்பட மாட்டானெனவும், அதையறியாமல் கிருஷ்ணன் அவனை வதஞ்செய்யவே முயன்றனெனவும், அதைப் பார்த்தருளியபகவான் கிருஷ்ணனை நோக்கி யிவனை வதைக்கவேண்டுமானால் என்னுடைய வநுக்ரகத்தை நீ பெறவேண்டுமென் றுரைத்தாரெனவும் பெறப்பட்டது. எனவே, யொருவராலுங் கொல்லப்படாமலிருக்க வரத்தைப்பெற்றவிவனை நீ கொல்வதோ சாத்யமன்றெனவும், எமது அநுக்ரகத்தைப் பெற்றுவது நீகொல்லலாமோவென்றால், அவனுக்குநாம் அபயங்கொடுத்த பின்னரதற்கு விரோதமாயுனக் கநுக்கிரகத்தைச் செய்யமாட்டோமாகையால் அதுவுங்கூடாத காரியமெனவும், ஆகையால், அவனைக்கொல்ல வேண்டுமென்னு மெண்ணத்தைவிட்டு அவன்றினவடங்க வவனுடன் சண்டைபண்ணாக்கடவாயென்று பகவான் கிருஷ்ணனுக்குணர்த்தினமையேபெறும். இங்கே, என தநுக்கிரகத்தைத் தேடிக்கொள்ளென்றது நாமநுக்கிரகஞ்செய்ய மாட்டோமென்ற பொருள்தந்து நின்றமைகாண்க. இம்மட்டேயன்றி. (அஸ்மத்ஸம்ச்ரயத்ருப்தோபி நாயம்வத்யஸ்த்வயாஸ்வயம், மயாதத்த வரோஹ்தைத்ய: ததஸ்தம்க்ஷமயாம்யஹம்.) என்னும் விஷ்ணுபுராண வசனத்தால் இந்தப்பாணன் கர்வமடைந்து திரிந்தாலும் நம்மாலே யநுக்கிரகிக்கப்பட்டவனாயிருத்தலால் இவனபராதத்தை க்ஷமித்திருக்கின்றோம், இவன் உன்னாலே வதஹா கொல்லத்தக்கவ னல்லவென்[illegible] வாயென்று கிருஷ்ணனைப்பார்த்துப் பகவான் சொல்லியருளினாராக வெளிப்பட்டது. மேல்உன்னால்சுயமாய்க்கொல்ல முடி[illegible]கென்றபோது, நாமநுக்கிரகித்தால் முடியுமென[illegible]ன்மேதானே நாமபயங்கொடுத்திருப்பதால் [illegible] தானக்கு வரத்தைக்[illegible] யால், எம[illegible]க்கிரகத்[illegible] மானருளி[illegible] ளிருந்தவ[illegible] [illegible]பட்டது அங்ஙனந்தேறிக்கப்பட்டமையால் ப[illegible] சிவபெருமானவனுக்கு [illegible] அவனுக்குத்தாயபயங்கொடுத்திரு[illegible] விரோதமுண்டாகாமையும் வெளிப்பட்டது.

இவ்வுண்மையையறியாமல் பாணனுக்குச் சிவன்கொடுத்த வரம் பாழாய் விட்டதெனவும், சிவன் கண்ணனுக்குப் பயந்து தனது மக்களோடு ஓடியொளித்தானெனவுங் கூறியழிவார் கோள்குண:பின்மையாய் முடிந்தது. பிள்ளைப்பெருமாள் என்னும் அந்தியஜமதப் பிரஷ்டனொருவன் றனதுமாலப்பிரபந்தத்தில் (ஐங்கரன், முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத், தேடியோடவாணனுயிரங் கரங்கள் குருதிநீர், சிந்தியோட) வென்றுடனிருந்து கண்டவனைப்போலப் பிதற்றியிருக்கிறானாகையால், அவன் பேதமையைக்காட்டி மறுக்கு நம்மான்றோர் திருவாக்குகளை யீண்டுச்சிந்திப்போமாக. (முருகனோட முக்கணீசனோட வென்று முன்னியே, திருகுரைத்தபேதையே சினந்துவாணனூறுடைந், தருகொடிந்து வீழவாயிரக்கரங்களன்றுமா, லொருமை வெற்றிகண்டதால முண்டகண்டனுனையே.) என்று கூறி (அங்கியோட வம்புயன் மயங்கியோட வங்கஜன், மங்கியோட வாசவன் மலங்கியோட மாலவன், சங்கியோடமாதருங் கலங்கியோட வேசவம், பொங்கி நீடவேமகம் பொடித்த தார்புகன்றிடே.) என்று விஷ்ணுவும், அவனது பெண்டிருங் அவனது மக்களும் யாகத்தி லோடியழிந்தமையும் பிரவசனஞ் செய்திருத்தலால், சிவாதிக்யநலம் வெளிப்பட்டவாறறிக.

ஆயின், யுத்தாநந்தரம் கிருஷ்ணனைச் சிவபெருமான் சர்வோத்கிருஷ்டமாகத் துதிசெய்த தென்னையெனின், அது கிருஷ்ணனைக் கௌரவப்படுத்தும் பொருட்டெனவறிக. எங்ஙனமெனின், பிரம்ஹதேவரைச் சிறையிட்டருளிய முருகக்கடவுளிடம் பிரணவோபதேசம் பெறவேண்டிச் சிவபெருமான் தாம்சிஷ்யபாவத்திலிருந்து அவரைவணங்கியுந் துதித்தும் பாராட்டிய வுரிமைகளைக்கொண்டு எந்தமூடனே முருகக்கடவுளைநோக்கச் சிவபெருமான் றாழ்ந்தவரென்றுரையா நிற்பன்? பாணனுக்கே சிவபெருமானுட்பட்டிருப்பாரெனின், கிருஷ்ணனுக்கவர் பணிவுகோடலும், அவனுக்கு அஞ்சினராக நாடகம்புரிதலும் சிவாபகர்ஷமாவதெப்படி? பாணன் சிவபக்தாக்ரேசனனபடியே அவனுக்குச் சிவபெருமான் பணிவுற்றவராயினர். அப்படியே யன்றோ கண்ணனிடமுங்கொள்ளற்பாலது? கண்ணன் உபமன்னியரிடம் தீக்ஷிதனாகிச் சிவபூஜாநிஷ்டனாயிருந்தானாகையால், பூர்வோத்தரசந்திகங்களை நோக்காமல் யாதொரு விஷயத்தையும் முடிவுரைக்கக் கூடாதாகையால் முன்னின் சந்தியறியாது கண்ணனுக்குச் சிவபெருமான் பயந்தோடினரெனவும், அவனைத் துதிசெய்தாரெனவும் வாய்வாட்பாடுகல் வசையுண்டு போயிற்றென்க.

இப்படி யறிவொழிந்து பாணன் சண்டையில் கிருஷ்ணனுக்குச் சிவன் முதுகுகாட்டி யோடினரெனக் கூறித்திரியும் பாவிசர் பின்வரும் வினாக்களைப் பரிகரித்துக் கொள்வாராக. விஷ்ணுவை யாகப்பதியாகக்கொண்டு வைஷ்ணவயாகஞ்செய்த தக்கனது தலையுருண்டகாலையில், அது விஷ்ணுவால் தடுக்கப்படாததென்னை? விஷ்ணுபுத்திரர்களாகிய பிரமன் மன்மதனிருவருக்குஞ் சிவனால் கேடுவந்தபோது அக்கேட்டைத்தீர்த்துத் தனது மைந்தரை யந்த விஷ்ணுபகவான் காத்துக்கொள்ளாததென்னை? சிவபக்தராகிய ததீசி முனிவர்மேல் விட்டபோது பொடிந்துபோன சக்ராயுதம் சிவனைத்தரக்கிற்றென்பதெப்படி? (சங்குகர்ண கணேசேந பிந்தஸ்தே கேசஸஞ்சய:) என்றபடிச் சங்குகர்நனென்னும் பாரிஷதனாகிய சிவகணத்தலைவனால் சிகையறுப்புண்டொழிந்த விஷ்ணுவுக்குச் சாட்சாத் சிவபெருமான் பயந்தோடினரென்பதெப்படி? ஷடி ததீசி பகவான் றனது காலின் கட்டைவிரலைபசைத்தபோது பலபலவென் றுதிர்ந்த விஷ்ணுக்களோடொரு சேரக்கழிக்கப்படும் மூலவிஷ்ணுவுக்கு அம்முனிவர்க்குபாஸ்யமானராகிய சிவபெருமான் பயந்தோடினரென்பதெப்படி? இப்படி யாந்த மூளவற்றைப்பரிகரிக்க வகைதேடாது கிருஷ்ணனுக்குச் சிவன்றோற்றார், சிவன்றோற்றாரென்ற கூபமண்டுகம்போற் கத்திக்கழிவார்கோள் குணமின்மையாய் முடிந்தமைகாண்க. இன்னும் விரிக்கிற்பெருகும். இதுவரையாம் கூறிவந்ததெல்லாம் விஷ்ணுபரத்வபோதகமாகிய பாகவதத்திற் பெறப்பட்டபடிக்குஞ் சிவாபகர்ஷம் சித்தியாமையைக் காட்டவேண்டியேயாம். முக்யவிர்த்தியால் அந்தப்புராணமுழுது மப்பிரமாண மென்பதே யெம்முடிவென்க. இதனைமேல் கங்காதாரணப் பிரக்யானத்தி லினிது விளக்கியிருக்கின்றோமாகையாலாண்டுகண்டுணர்க.

இந்தமுடிவால் மேலெடுத்துக்கொண்ட நரசிம்ஹவதம், கங்காதாரணப்பிரக்யானம், பாணாசுர விருத்தாந்தமாகிய மூன்றனுக்கு முபசமன முண்டானதா லின்னவாந்த சிவபாரம்யப்பிரவசனங்களை ஸ்ரீமதப்பயவேதாந்த பிரவர்த்தகாசாரியரும், சிவாகமசித்தாந்த ஞானநிஷ்டருமா யெழுந்தருளியிருந்த காட்டாவூர், ஸ்ரீசுந்தரசிவாசாரியசுவாமிகள் செய்தருளிய சிவாதிக்யரத்னாவளி முதற்பாகத்திலும், எம்மால் செய்யப்பட்ட ஷடி சிவாதிக்யரத்னாவளி இரண்டாவது பாகத்திலும் பரக்கக்காணலாமென்க.

பிரமாணத்திரட்டு.

இங்ஙனநிற்க. மேற்கூறிப்போந்த சிவபாரம்ய ஸித்தியாற் பெறப்படும் பதிஞானங்கைவரப்பெற்றவர்க்கே பரசிவஸித்தி யுண்டாமென்பது திண்ணமாகையா லன்னமாஹாத்மியங்களை யுணர்த்துஞ் சிலசுருதிகளை யிண்டெழுதிக்காட்டுவாம்.

"ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்மா" என்றபடியே "ஏகஏவருத்ரோந த்விதீயாயதஸ்தே" என்றுகூறினமையால் பிரம்ஹபத ருத்ரபதங்கள் பரியாயபதங்களாக வெளிப்பட்டன. இப்படியே "ஸர்வம்கல்விதம் ப்ரஹ்மா" என்று பெறப்பட்டதற்கேற்ப "ஸர்வோஹ்யை ருத்ர:" என்று வெளிப்பட்டது. ஈண்டும் பிரம்ஹருத்ரசப்தங்கள் பரியாயமாயின. இவ்வுண்மையால் பிரம்ஹமே ருத்ரனென்னவும், ருத்ரனே பிரம்ஹமெனவுமறியலாச்சுது. இந்தவியவஸ்தையால் உருத்திரரைக்காட்டினும் வேறொருபிரம்ஹங்கிடையாதென்பது தீர்மானம். "ஏகோஹவை நாராயண ஆஸீத்" என்றதும் பிரம்ஹபரியாயமாகாதோ வெனின், இதில் (அத்விதீயம்) என்னும் விசேஷணமில்லாமையால் ஏகார்த்தம்பயவாது. அதனுலிது பிரம்ஹப்பிரதிபாதக சுருதிக்குப் பரியாயமென லமையாது. ஆகவே, இந்திர சந்திரர்களைப் பிரதிபாதிக்குமன்னவற்றோடு சேருந்தகைமைத்து.

"யஸ்மாத்பரம் நாபரமஸ்திகிஞ்சித்" எனவும், "நதத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே" எனவும் போந்த வாக்கியங்களால் யாதொருவனைக் காட்டினும் உத்கிருஷ்டனுஞ் சமானனுமில்லையோ அவன் சிவனென்றுவெளிப்பட்டது. இந்தவுண்மையால் சிவனுக்கு உத்கிருஷ்டஸமத்வமுடைய தேவதையைப் பிரதிஷேதித்துச் சிவனுக்கே ஸர்வோத்கர்ஷத்வம் சாதிக்கப்பட்டது. இதனையே "பராத்பாதரோப்ரஹ்மா தத்பராத்பரதோஹரி:, தத்பராத்பரதோஈஸ: தஸ்மாத் துல்யோதிகோநஹி" என்னும் வாக்கியமும் நிறுத்தும். இங்கே பெறப்பட்ட ஈட்டதம் பிரம்ஹ விஷ்ணுக்களுக்கு [illegible] க் காட்டலா லவ்விருவரும் ஈசர்களாகாரென்பது [illegible] கண்டு ஈசசப்தம் ருத்ரஸதனத்தில் விநியோகம் பெற்றமையால் [illegible] ருத்திரன் [illegible] விஷ்ணுக்கு மீறுதியென்பது ஸித்தம். ஈசுவரன் [illegible] னென்ற தேசப்பிரமக்க [illegible] காரணசாமி [illegible] ஷித்திக்கும். இதனால் திரிமூர்த்திகளிலொருவராகிய [illegible] ஸுசித்தாந்தாற் போந்த பரமபதியென்று துணி[illegible]

தாந்தத்தில் திரிமூர்த்தியுத்தீர்ணரான துரியமூர்த்தியை யங்கீகரித்திருப்பதுபோல் பாஞ்சராத்திரத்தில் துரியவிஷ்ணுவை யங்கீகரித்த தில்லை. இந்தவுண்மையால் சைவநூல்களில் விஷ்ணுவுக்குக் கூறும் அபகர்ஷங்களெல்லாம் அந்தவொருவிஷ்ணுவையே சாரும். வைஷ்ணவநூல்களில் உருத்திரருக்குக்கூறும் அபகர்ஷங்களெலாங் குணருத்ரரையேயன்றித் துரியருத்ரரைச் சாரா. இன்னும், ஏகாதசருத்ரர், சதருத்ரர், சஹஸ்ரருத்ரரிருப்பும் வேதத்திற்கூறப்படுதலால் துரியசிவனிடம் அபகர்ஷமேறவே யிடமில்லை. அபகர்ஷோத்கர்ஷங்களை யொரேபொருளிடங்கூறுதல் அமையாமையால், வைஷ்ணவ நூல்களிற் பெறப்படுமுத்கர்ஷங்களு மந்தர்யாமிபாவத்தால் சிவைக நிஷ்டமேயாம், இப்படிப் பராசரபுராணத்தில் வியவஸ்தைபண்ணி யிருத்தல் காண்க.

துரியமூர்த்தியைத் திரிமூர்த்திகளுக் குறப்பத்திஸ்தானமானவரும், வேறானவருமாகச் சொல்லியிருக்கும் வாக்கியத்தையும், அகாரவுகார மகார வியஷ்டிப்பிரணவ வாச்சியர்கள் திரிமூர்த்திகளெனவும், ஓங்காரமாகிய ஸமஷ்டிப்பிரணவவாச்சியர் துரியருத்ரரெனவுமுணர்த்தும் வாக்கியத்தையும், மேல் (௫௬) (௫௭) வது பக்கங்களிற் காட்டியிருக்கின்றோம். இன்னும், "சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம் மந்யந்தே" என்னும் வசனத்தாலும் அவர் மூன்றுமூர்த்திகளுக்குமப்பாற்பட்ட நாலாவது மூர்த்தியென்பது வலிந்திந்தது. இந்தநாலாவது மூர்த்தியே "த்ரிஷுதாமசுயத்போஜ்யம் போக்தாபோகச்சயத்பவேத், தேப்யோவிலக்ஷணஸ்ஸாக்ஷி சிந்மாத்ரோஹம் சதாசிவஃ" என்னும் வாக்கியத்தால் ஜாக்கிரமுதலான மூன்றுஸ்தானங்களிலும் எது புஜிக்கத்தக்கதோ, எவன் புஜிக்கிறவனோ, எது போக்மோ அவைகளுக்கு விலட்சணமும், ஸாட்சியும், சிந்மாத்திரமுமான நான் சதாசிவன் என்று கூறினர். "சிவஏகோ த்யேயச்சிவம் கரஸ்ஸர்வ மந்யத்பரித்யஜ்ய" என்னும் வசனத்தால் அன்னியமாயுள்ள சகலமானவற்றையுந் [illegible] சிவமை [illegible] தன்மையான [illegible] த்தைச் செய்கின்ற [illegible] பெருமானொருவரே தியானஞ்செய்யத்தக்கவரென்று [illegible] மையால், துரியப்பொருளாகிய வச்சிவமூர்த்தியையே [illegible] களடைகின்றனர். சகலமானவற்றையுந் தள்ளவேண்டிய [illegible] த்தில் "ஹேயாந் விஷ்ண்வாதிகாந் சுராந்" என்று விஷ்ணுவாதி [illegible] குறிப்பித்தமை தெளிக. மேற்போந்த "தேப்யோவில [illegible] ஸாக்ஷி" என்னும் வாக்கியத்தையும், "ஸாக்ஷி சேதா கேவ

லோ நிர்க்குணச்ச" என்னும் வாக்கியத்தையும் ஸமந்வயஞ்செய்து
பார்த்தால் ஸ்ரீசிவபெருமானே விஷ்ணுமுதலான ஸகலபிரபஞ்ச அ
ந்தராத்மாவா யுள்ளவரென்பது தெற்றென விளங்கும். சிவனைச்
சேவிக்காமல் துக்காந்தரூபமாகிய மோக்ஷத்தையடைவது கூடாதெ
ன்பதை "யதாசர்மவதாகாசம் வேஷ்டஇஷ்யந்தி மாநவா:, ததாசிவம
விஜ்ஞாய துக்கஸ்யாந்தே பவிஷ்யதி" என்னும் வாக்கியங்காட்டலா
லிவ்வாக்கியத்திற் கூறியிருக்கும்படியே யெவனுவ லாகாசத்தைச்
சர்மமாகச்சுருட்டி மேலே போர்த்துக்கொள்ளுவானோ வவன்றான
ன்றே சிவனைச் சேவிக்காமல் மோக்ஷத்தையடையக் கூடும்?

மேல்விவகரித்த வாக்கியங்களால் சிவஸேவையாற்றானே முத்
தியுண்டாமென்று வெளிப்பட்டதை வற்புறுத்திக்காட்டு மேனையவா
க்கியங்களையும் பரியாலோசிப்பாம். "ஈசம்ஜ்ஞாத்வா அம்ருதாபவந்தி"
என்னும் வசனத்தால் சிவபெருமானையே ஜகஜ்ஜந்மாதி காரணமெ
ன்றும், முமுக்ஷுஜநப்பிராப்யபதமென்றுந் தெரிந்துகொண்டவ
ர்கள் முக்தராகின்றார்களென்று பேறப்பட்டது. இந்த ஈசசப்தமா
னது அர்யதாபொருளைப் பயவாதபடி "ஜ்ஞாத்வாசிவம் சாந்தமத்ய
ந்தமேதி" என்னும் வசனத்தில் சிவசப்தத்தா லவ்வீசனே சிவனெ
ன்பதுதோன்றச் சிவனை யறிந்தவர்கள் ஜநநமரணப் பிரவாகது
ஸ்தரமாகிய ஸம்ஸாரதுக்கத்தி னின்று மத்யந்தசாந்தியடைகின்று
ர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிவனைக்காட்டிலும் ஈசுவர
னொருவன் வெளிவருதற்கு வேதமொருவருக்கு மிடங்கொடாமையா
ல் [illegible]பரமசிவப்பிரதிபாதகமாகிய ஈசுவரசப்தத்தைக்கொ ஷிக்கும்
[illegible] சுருதியொன்றையீண்டு வெளிப்படுத்துவாம். "ஈசாநஸ்ஸர்வ
வித்யாநா மீச்வரஸ்ஸர்வபூதாநாம் ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர்
ப்ரஹ்மா[illegible] அஸ்[illegible]ஸதாசிவோம்" எனப்போந்த வாக்கியத்து
க்கு லட்சியப்[illegible]ருளி[illegible]தென்பது வெளியாக "ருதம்ஸத்யம் ப
ரம்பரம்புருஷம் [illegible]க்ருஷ்ணபிங்களம், ஊர்த்வரேதம். விரூபாக்ஷம் ச
[illegible] [illegible] [illegible] பிநாகீ[illegible]யுதி:" என்
று பரிஷ்காரப்படுத்தி யிருக்கின்றாரும்.

மேல்வாக்கியங்களில் வித்தை [illegible] [illegible]வும்,
பூதங்களெல்லாவற்றிற்கும் பதியெனவும், பிரமதா[illegible] [illegible]
னவும், பிரம்மனுக்கதிபதியெனவும் [illegible] [illegible] அதி
பதியாகிய சிவனே ஸர்க்கப் பிரம்மாவும், பூதங்களாகி[illegible]
ருப் ஈசுவரர்களாதல் எங்ஙனங் கூடும்? என்பேப்பூதங்[illegible]

ரம்ஹாவுக்கு மதிபதித்வம் சிவனிடம் பெறப்பட்டமையால் அவரே விஷ்ணுவுக்கு மதிபதித்வமுடையாரென்பது தானே போதரும். பிரம்ஹவிஷ்ணுருத்ரர்கள் சிவனிடத்திற்பிறந்தார்களென்னும் வசன முண்மையால் விஷ்ணுவுக்குஞ் சிவன் அதிபதியென்பது இழுக்கா தென்க.

அன்றியும், "ஏதாவந்தோவை பசவோத்விபாதச் சதுஷ்பாதச்ச" என்னும் வசனத்தில் பசுக்களையும், "தஸ்மாத்ருத்ர: பசூநாமதிபதி:" என்னும் வசனத்தில் அப்பசுக்களுக்குப் பதியையுங்கூறலால், சர்வ பசுக்களுக்கும்பதியாகியவுருத்திரர் விஷ்ணுவாகிய பசுவுக்குமாத்தி ரம்பதியாகாரென்று நாம்சொல்லுதல் கூடாது. "ஸர்வேதேவா: பசுநா மவாபு:, ஸ்வயந்தஸ்மாத் பசுபதிஸ்ஸம்பபூவ" எனவும் "ஸ்வதச்சிவ: பசுபதிஸ்ஸாக்ஷி ஸர்வஸ்யஸர்வதா, ஸர்வேஷாம்து மநஸ்தேந ப்ரேரித ம்நியமேநது" எனவும் போந்தவசனங்களால் சமஸ்தமான தேவர்க ளும் பசுக்களாவரெனவும், அப்பசுக்களுக்குப்பதியும், ஸர்வத்துக் கும்ஸாட்சியும், ஸகலருடைய மனதுகளையும் நியமமாகவெங்கும்மேவ ச்செய்கின்றவரும் ஸ்ரீசிவபெருமானுவாரெனவும் வெளிப்பட்டமை யால், அத்தேவஸமூகங்களி லெண்ணப்பட்டவராகிய விஷ்ணுப்பிர ம்ஹாக்களுக்குப் பசுபதியாகிய வச்சிவபிரான் அதிபராதலி லென் னபாதகமுண்டாம்? விஷ்ணுவை யாகப்பசுவாக்கித் தேவர்கள் சிவ ப்பிரீதிகரமான யாகஞ்செய்தார்களென்பதற்கு "யஜ்ஞேந யஜ்ஞமய ஜந்ததேவா:" என்னும் வாக்கியமும், அப்படிப்பட்ட யாகப்பசுக்களுக் க்குகர்த்தா வுருத்திரரென்பதற்கு "ருத்ர:பசுகர்த்தா ருத்[illegible] தேவ:" என்னும் வாக்கியமுஞ் சான்றாதல் தெளிக்கிறிக. அந்த விஷ் ணுவானவர் சிவனைத்தனக் கதிபதியாகத்தொண்டு[illegible]ராதனஞ்செ ய்தாரென்பதற்கு "அவஸ்தாத்ரயாதீதம் [illegible] ப்ர[illegible]திநம், ப்ர ஹ்மவிஷ்ணவாதிபிஸ் ஸேவ்யம் ஸர்வே[illegible] ம் பரம ம் வித்யாத் ப்ரோதம் [illegible]" எனவும், "[illegible]திசி விஷ்ணு: [illegible] ஸ்தே" எனவும், "தவசிர்யேமந தோ [illegible] நீ:சாநசித்தாம், பதம்யத்விஷ்ணோ நபமர் யதரீ[illegible] தஸ்யம் நமசோநாம்" எனவும் போந்தவசனங்கள் [illegible]. இவற்றின் பொருள்களை நோக்கின், அரியாகி ய [illegible]பிரான் [illegible] விஷ்ணுக்களால் ஸேவிப்பவனாய் விளங் [illegible]னவும், காசியின்கண் தென்றிசையில் விருந்துகொண் [illegible] விஷ்ணுவானவர் சிரசில் கூப்பியவஞ்சலியுடன் சிவபெருமானை

பாசிக்கின்றாரெனவும், விஷ்ணுவானவர் சிலாமயமான சிவலிங்கபூசை செய்து பரமபதமென்னும் வைகுண்டலோகத்துக் கதிபதியானாரெனவும் வெளியாகின்றன. இன்னும் அந்தப் பரமேசுவரரை யோசிக்கையில் "விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:" எனவும், "மாயாந்து ப்ரக்ருதிம்வித்யாந் மாயிநந்து மஹேச்வரம், தஸ்யா வயவபூதோத்தம்வ்யாப்தம் ஸர்வமிதம்ஜகத்" எனவும் போந்தவாக்கியார்த்த விசேஷத்தால் "வாசுதேவ: பராப்ரக்ருதி:" என்னும் வாக்கியத்தால் ஸித்திக்கும் அர்த்தஸ்வரூபராகிய வாசுதேவருக்கு அதிபதியாயிருக்கின்றாரென்பதி லென்னவாக்ஷேபமுண்டு? இதனையே, "யோவேதாதௌஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தேசப்ரதிஷ்டித:, தஸ்யப்ரக்ருதிலீனஸ்ய ய:பரஸ்ஸமஹேச்வர:" என்னும் வசனமும் நிறுத்தும். இப்படிப்பட்ட பரமேசுவராராதனத்தைக்காட்டிலும் மோக்ஷோபாயமான வழி வேறேயில்லாமையால் ஸ்ரீசிவபெருமானையே யாவரும் வணங்கியுய்யக்கடவர். அவருடைய வதிகாரசக்திகளை வகித்து அவரிட முத்தியோகஞ் செய்யும் விஷ்ணுவாதிகளுக்குச்செய்யு நமஸ்காராதி ஸ்தோத்திரங்களுமப்பரமேசுவரரையே யடைதலால் ஸர்வவந்திதராகிய வந்தத்தயாலிந்துவே நாமாச்சிரயிக்கத்தக்கவரா யிருக்கின்றனர். "ஸ்தோமம் வா அந்யந்த்ராய ஸர்வசேக்ஷயத்விராய நமஸாதிதிஷ்டந" என்னும் வாக்கியத்தால் மேலுண்மை வெளிப்பட்டவாறறிக. இப்படிப்பட்ட பரமசிவனை "ஸத்யோஜாதம் ப்ரபத்யாமீதிதி" வசனங்களால் ஆச்சிரயிக்குந்தன்மையும் வேதபடிதமாயிருத்தலா லப்பஞ்சப்பிரம்ஹ ஸ்வரூபராகிய ஸதாசிவமூர்த்தியையே சிவலிங்கமுகமாக ஷாத்மார்த்த பரார்த்தங்களாகிய பூஜாப்பிரகாரங்களால் ஸேவித்துய்வோமாக. "யதா தமஸ்தந் நதிவாந்ராத்ரிர் நஸந்நசாஸச்சிவ ஏவகேவல:" எனவும், "[illegible] ஸஞ்சுகோசாந்தகாலே, ஏகஏவருத்ரோ நத்விதீயபாயதஸ்தே, நப்ரஹ்மா நவிஷ்ணுர் நசூர்யோ நாக்நிசந்த்ரா தாரகா:" எனவும் போந்த [illegible] வசனங்கள் இவ்வாரம்பத்தைக் காட்டினவாதலால், அவற்றை [illegible] விஸ்வாவிலுபாதியடைந்தோம். இந்நூலில் [illegible] விஷயங்களைக் (குதர்க்கவாதவிபஞ்சினி) "ஆபாசஞானநிரோதம்" இந்யாதி பிரபந்தங்களிற் பரக்கக் கண்டுகொள்க.

[illegible] மேல்விசாரத்தால் ஸ்ரீருத்ரமூர்த்தியே பரப்பிரம்ம [illegible] அவரே [illegible] மெனவும் அவரையன்றி யற்பமுஞ் சிதிக்கவி [illegible] னவும் அவருக்கு வேறாகப் பிரஹ்மத்வநிரூபணம் [illegible]

டித்து மற்பமுஞ்செய்ய யோக்கியமின்றெனவும், அவர் பிரம்ஹவிஷ்ணுவாதி மூர்த்தித்திரயாதீதரா யுள்ளவரெனவும், அவரேயீசசப்தவாச்சியரா யிருத்தலா லவரைநோக்கவேண்டியோ ரீசுவரராகின்றாரெனவும், அத்வைதரும், சாந்தருமாகிய வவரைநாலாவது பொருளாக வறியவேண்டுமெனவும், அவர் ஸர்வத்துக்கும் ஸாட்சியாயும், சின்மாத்திரமாயுமுள்ள ஸதாசிவமூர்த்தி யென்று சொல்லப்படுவரெனவும், அப்படிப்பட்ட பரமசிவத்தையே யன்னியமாயுள்ள ஸமஸ்தத்தையும் விட்டுத் தியானிக்கவேண்டு மெனவும், அவ்வன்னியங்கள் விஷ்ணுவிறுதியாகக் கொள்ளப்படுமெனவும் வெளிப்பட்டது. விஷ்ணுவை வேதங்களிற் பரம்பொருளென்று சொல்லுகையால் அவரைவர்ஜித்தல் கூடுமோவெனின், அந்தவேதந்தானே வர்ஜனத்தைக் கூறினமையால் குற்றமில்லை யென்க. பரமாகவும், அபரமாகவும் அவரை வேதங்கூறிய தென்னையெனின், பிரமனுதி கீழிட்டவரை நோக்கப்பரமும், உருத்திராதி மேலிட்டவரைநோக்க வபரமுமாகக் கூறியதாம். உருத்திராதி மேலிட்டவர் துரியசிவனது விபூதிகளும், பிரமனுதி கீழிட்டவர் தன்னைப்போல் சிவாநுக்கிரகம்பெற்ற சேதனர்களுமாகையால் சுருதிவிரோதமில்லை. பாசத்தாற் கட்டுண்டு கிடக்கும் பசுக்கள் தங்கள்கட்டுகளைத் தாமேயவிழ்த்துக்கொள்ளக்கூடாமையாலும், ஒருபசுவுக்கு மற்றொருபசுவுங் கட்டையவிழ்த்துவிடக் கூடாமையாலும், விஷ்ணுவாதிஸமஸ்த தேவர்களையும் வேதம் பசுக்களென்று கூறுகின்றமையாலும், விஷ்ணுவரையில் இஷ்டராயுள்ளபேர் வர்ஜிக்கத்தக்கது என்றவுரை ஸாமஞ்சஸியம்பெற்றது. பசுக்களைப்போலவே பதியும்பிறந்துழல விடமில்லையாகையால், பிறந்து பிறந்து சாகும்பசுவாகிய விஷ்ணுவுக்குப் பதித்தன்மை செரிக்காதென்க. விஷ்ணுபிறந்து சாதலைத் தர்மஸம்ஸ்தாபனார்த்தமென்று கண்ணன் கீதையிற் கூறினமையால் அது சீவத்தன்மையாகாதெனின், நாராயணனைப்போலவே [illegible]னும் பிறந்து செத்த கதைகள் தர்மஸம்ஸ்தாபனத்தின் பொருட்டென்று கேட்கப்படுகையால் [illegible] உசிதம்பெறுதென்க.

விஷ்ணுவைப்பசுவாகக் கொண்டால் அந்தப்பசுவுக்குப் பத்து [illegible] வரையறுக்கப்பட்ட ஜந்மமுண்டாகுமா? பசுக்களுக்கு எண்ணிறந்தபிறவிகளை யுடையவர்களல்லவா? அப்படியேயன்றோ விஷ்ணுவும் பிறந்துழலவேண்டும்? அப்படிக்கின்மையால் [illegible] பதியாகிய நாராயணர் இனாற்றிலிருக்க சிவ[illegible]டுக்க

த் தானுங்குதிக்குந்தாயைப்போல் தசாவதாரங்கள் செய்தாரெனவும், இந்திரன் முதலியோர் ஸாமான்யசிவராகையால் எண்ணிறந்த பிறவிகளை யுடையவன்றோர் ஜந்மங்களையவசியமெனக் கொண்டு வேதங்கூறுதபடி அவருளொருவராக வெண்ணப்படும் உருத்திரருடையஜந்மங்களையும் வேதஞ்சொல்லாதெனவும், அப்படிச்சொல்லாததுகொண்டே சிவனுக்குப் பரமபதித்வம் ஸித்திப்பது கூடாதெனவுமுண்டாகுங் கடாக்களுக் கிறைதருவாம்.

விஷ்ணுவுக்குப் பத்துப்பிறவிகளென்னும் வரையறையுண்டாயினமையே அவர் பதியாதலைக்காட்டுமோவெனில்; ஜயவிஜயர்களுக்கு மூன்றேபிறவிகளென்னும் வரையறையுண்டாயினமையால் அவரென்னவாதலை அது காட்டும்? பக்தர்க்குஞ் சுருக்கமாக மூன்று ஜன்மம் பெற்றாராகையால் அவர்கள் விஷ்ணுவுக்கும் மேம்பட்ட பதிகளாயினர்போலும். ஜயவிஜயர்களுக்கு அம்மூன்று ஜன்மங்களுஞ் சாபத்தாற்கிடைத்தமையால். அப்படியேயன்றோ பத்து ஜந்மங்களைச் சாபத்தால் விஷ்ணுவும்பெற்றனர்? பிருகு சாபத்தால் விஷ்ணுவுக்குப் பிறவிகளுண்டாயினமை பிரமாணஸித்தமாகையால் கேவல ஞானம் பெற்றவிருந்தாலன்றோ எண்ணிறந்த பிறவிகளைக் கொண்டிருக்கும் பசுக்களாகிய ஜயவிஜயர்களுக்கு விஷ்ணுதுவாரபாலகராயப் பவித்தமையுந் தனித்தனியோர்ஜந்மமாகையால் அந்த ஜந்மமுடிவதற்குமுன் அபராதத்தாலிடையில்வந்த ஜந்மங்கள்மூன்றும். இப்படியேயன்றோ விஷ்ணுவிடமுங் கொள்ளத்தக்கது? பிறந்து பிறந்துழலு மோர்ப்பசுவுக்குச் சிவாராதனபலத்தால் விஷ்ணுவென்னும் [illegible]டமும், பரமபதமென்னும் வைகுந்த நாட்டரசுங் கிடைத்த [illegible] அது செவ்வனே நடத்திவருகையி லிடையிடையேர்ந்த வபராத[illegible]ப் பக்தப்பிறவிகளுண்டாயின. பத்துஜந்மங்களு முடிகதவு [illegible] வாமியாக்கிர [illegible] காலம்வரைபோது செ [illegible] படுத்துழ [illegible] தமாகிய [illegible] [illegible] ராம் [illegible] [illegible] காரின், [illegible] [illegible] [illegible]

1. சித்தாந்தரத்நாகரம் என்னும் பருடப்புனைந்து சிலவாண்
டுகட்கு முன்னர் "வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்" ஸ்ரீல
சோமசுந்தர நாயகரவர்களால் அநேக நூல்கள் வெளியிடப்ப
ட்டன. அதிற்பொதிந்து வெளியாகிவந்த சிவோத்கர்ஷ கிரந்தங்க
ளும் சுத்தாத்வைத சைவசித்தாந்த ஸமைத ஸ்தாபனமும் பரமத
கண்டனமுமாக பல அரிய சிவபாரம்மிய விஷயங்களைக்கொண்டு
துள்ளன வென்பது யாவருமறிவார்கள்.

2. இந்நூல்களைப் பார்ப்பவர்கள் புறச்சமயிகள் மயக்கிவிட
டாது சகலசந்தேகங்களும் நீங்கி இன்புறுவார்களென்பதற் கைய
மில். அநேக பிரபல உபநிஷத் பிரமாணங்களைக் கொண்டுவிளங்கு
வை தற்காலம் கிடைப்பதருமையாக, சென்னை வேதாகமோக்த சை
சித்தாந்த சபையார் கல்விருப்பின்படியும், ஷை-ஸ்ரீலஸ்ரீ நாயக
ர்கள் மைத்துனர் - ம-ள-ள-ஸ்ரீ சி. நாராயணசாமிநாயகர், ஷை யா
மருகர்-ம-ள-ள-ஸ்ரீ - த. கிருஷ்ணசாமிநாயகர் ஆகிய இருவர்களது
வேண்டுகோளின்படியும் ஷை ஸ்ரீநாயகரவர்களா லியற்றியுள்ள
எல்லா நூல்களையும் பரிசோதித்து 6-பாகங்கொண்ட மாதாந்த சஞ்
சிகையாக வெளியிட்டு வருகின்றோம்.

3. கைபொப்பக்காரர்களாகிய வெளியூரார் தங்கள் சந்தா
தொகையை முன்பணமாக மணியார்டர் செய்யவேண்டும்.

4. இவ்வரிய சித்தாந்தரத்நாகரம் என்னும் நூலுக்கு சகாய
மாகப் பொருளுதவுபவர்க்கும் சைவாபிமான [illegible] உடைய பெ
ரர்கள் நன்றியறிதலுடன் இந்நூற்சஞ்சிகைகளில் [illegible] பிமானிக
ளென்னுந் தலைப்பின்கீழ் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படும்.

5. இந்நூற சஞ்சிகை [illegible] வெளியூர்களிற் பரவு [illegible]
டு முயற்சிசெய்வாரது முயற்சியளவுக்குத் தக்கவாறு [illegible]
ஞ் செய்யவும் சித்தமாயிருக்கின்றோம்.

6. பத்துப்பிரதி வாங்குவோர்க்கு ஒன்று அதிகப்படி [illegible]
கப்படும். ஒரு சஞ்சிகையின் விலை அணா 4 [illegible]
செலுத்துவோர்க்கு (6) மாதத்திற்கு [illegible]
க்கு ரூ 1-8-0 [illegible] சந்தா [illegible]
[illegible]
[illegible] வேண்டும்.

7. [illegible] கட்டளை [illegible]

இங்ஙனம், [illegible]

சென்னை } [illegible]
30—11—06 { [illegible] ([illegible])
[illegible] 30 [illegible]

* கௌரவா[illegible]லர்கள்.

ஞானப்பிரகாசஸ்வாமிகள்

ஸ்ரீ-மஹாசந்நிதானம்.

Conjeevaram.

ஸ்ரீமாந்-K. M சப்பதாய முதலியார் அவர்கள்

Zemindar.

ஸ்ரீ ஏகாம்பரநாதஸ்வாமிதேவஸ்தான தருமகர்த்தர்

Conjeevaram.

" அரங்கசாமி ரெட்டியார் அவர்கள்.

Zemindar, Vadipatti.

" சோமசுந்தர முதலியார் அவர்கள்.

Taluq Board member, North Arcot District.

Tiruvettipuram.

" கா. சுந்தையாபிள்ளை அவர்கள்

Storekeeper, P. W. D. Klang.

" P. S. சரவண முதலியார் அவர்கள்

சைவப்பிரசாரகர்.

Storekeeper, Engineering Workshop, M. R. C.

Arkonam.

" சுப்பிரமணியபிள்ளை அவர்கள்

மஹாவித்வான் திருஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகள்

மடாதிபதி, மதுரை.

" T. M. சுந்தரம்பிள்ளை அவர்கள்

General merchant, Dindigul.

" கா. கங்காதர முதலியார் அவர்கள்.

Late chief clerk, Traffic managers Office

S. I. R, Trichinopoly.

திரிசிபுரம் சைவ[illegible]

---

* இச்சித்[illegible] [illegible]

[illegible]